
www.tamilarangam.net

போராடும்

# புதிய இளைஞன்

ஆகஸ்டு

'OSAI'
5 RUE HERMEL
75018 PARIS



நமது
சுதந்திரம்..!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்







www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய இலெமுனை

இனி ஒரு
விதிசெய்வோம்!

□

இதழ் : 4

ஆகஸ்டு, 1990

□

விலை ரூ. 2

□

ஆசிரியர் :
சி. மகேந்திரன்

ஆசிரியர் குழு :
தேவ. பேரின்பன்
மு. வீரப்பாண்டியன்

## சோசலிசத்தில்...

சோசலிஸ உலகில், அண்மை காலங்களில் ஏற்பட்ட குழப்பங்களுக்கு, சோவியத்து கம்யூனிஸ்ட் கட்சியின் 28வது காங்கிரஸ் ஒருவாறாக முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

தவிர்க்க முடியாமல் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோன்றிய 'சோசலிஸம்' அற்ப ஆயுளோடு மறைந்து விடும் என்ற பிரச்சாரங்களுக்கு ஆதாரமில்லாமல் போய் விட்டது.

ஒவ்வொரு நாட்டிலும் சோசலிஸத்தை செயல் படுத்துவதில்தான் தவறுகள் நிகழ்ந்துள்ளன. இந்த தவறுகளை புரிந்து கொண்டு தங்களை திருத்திக் கொள்ளாத நாடுகள் பெரும் சேதத்தை சந்தித்தன. மற்ற சோசலிஸ நாடுகள் தவறுகளிலிருந்து மீள துவங்கியுள்ளன என்பதுதான் உண்மையான நிலவரம்.

சோசலிஸம் ஆட்சி பொறுப்பேற்று 73 ஆண்டு களாகின்றன. ஆயிரமாயிரம் ஆண்டுகால சரித்திரத்தில், இது மிக மிக குறுகிய காலம். வரலாற்றில் இதுவரை சாதிக்கப்படாத சாதனைகளும், மாற்றங்களும் இந்த காலத்தில் நிகழ்ந்துள்ளது.

ஆனால் அதே சமயம் ஜனநாயக வேட்கை மிகுந்த இன்றைய காலத்தில் சோசலிஸ நாடுகளின் தலைமை யும், வெறும் அதிகார மையங்களாக மாறின.

லஞ்சமும், ஊழலும் வளரத் துவங்கியது. இதை களைய மக்கள் நேரடியாக அரசாங்கத்தில் பங்கேற்க வழிவகை காண வேண்டும்.

உலக பொருளாதாரத்தில் பெரும்பகுதி நவீன ஆயுதங்களுக்காக விரயமாக்கப்படுகின்றது. ராணுவ பலம் பொருந்திய ஏகாதிபத்தியத்தை முறியடிக்க சோவியத் யூனியன்— ஒருதரப்பாக ஆயுதங்களை குறைத்து வருகின்றது

விஞ்ஞான தொழிற்நுட்ப புரட்சியை முழுமையாகப் பயன்படுத்திக் கொண்ட ஏகாதிபத்தியம் தங்கள் நெருக்கடியை மறைத்து சில துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. யுத்த தயாரிப்பு என்னும் சதி வலையில் சிக்க வைத்துள்ளது. சோசலிஸ நாடுகள் இந்த சதி வலையை அறுத்தெறிந்து விட்டு, தங்கள் நாட்டு மக்களின தேவையையும், உலக மக்களின் தேவையை யும் பூர்த்தி செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

பெரிஸ்ரோய்கா, கிளாஸ்நாத் — வழங்கிய சோவியத்து கம்யூனிஸ்ட் கட்சியும், அதன் தலைவர் கோர்பசேவ் அவர்களுக்கு தங்கள் கட்சி காங்கிரஸ் மூலம் மேலே கண்ட விஷயங்களை செயல் படுத்தும் புதிய நம்பிக்கைகளை வழங்கியுள்ளார்கள்.

□

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்.

www.tamilarangam.net



# காவல்துறையின் 'மாமூல்' உலகம்

இந்திய நாட்டின் ஒவ்வொரு சாதாரண குடிமகனும் ஏதாவது ஒரு விதத்தில் போலீசிடம் சிக்கி காசை இழந்திருப்பது நிச்சயம்.

ஸ்கார்ட்லாண்ட்யார்டு போலீசுக்கு அடுத்தது தமிழ்நாடு போலீஸ் என்ற சிறப்பு உண்டு.

ஆனால்! இப்பொழுது அல்ல.

இருபது ஆண்டுகளுக்கு முன்.

லஞ்சம் வாங்குவதில் உலகமகா கில்லாடிகள் நம் தமிழக போலீசார். வழிமுறைகளும் ஏராளம்:

"போலீஸ் வேலை போக்கத்தவன் வேலை" என்று உதறித்தள்ளியது ஒருகாலம்.

போலீஸ் கான்ஸ்டபிள் வேலைக்கே இப்பொழுது பத்து முதல் இருபதாயிரம் லஞ்சம் கொடுத்தால் தான் வேலை உண்டு. அதுவும் நிச்சயமில்லை..

இது திராவிட இயக்கங்களின் கைங்கரியம்.

அரசியல்வாதிகள் தேர்தலுக்கு வாரி இறைத்து ஜெயித்தபின் "மக்கள் அடி மடியில் கை வைப்பது போல்," லஞ்சமாக கொடுத்து வேலைக்கு சேர்ந்த போலீஸ், பின் லஞ்சம் ஒன்று மட்டுமே குறிக்கோளாக செயல்படுகின்றனர்.

போலீசே நேரடியாக லஞ்சம் வாங்குவது, அல்லது ஏஜண்ட்டுகள் மூலமாக பெறுவது, இப்பொழுது சில அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் தான் இடைத்தரகர்கள். ஆளுகின்ற கட்சிகள் மாறுகின்ற பொழுது ஏஜண்டுகளும் மாறுவார்கள்.

இரண்டு நபர்களுக்கு சண்டையா? போலீசிடம் நீதிகேட்டு போக, அடிபட்டு ரத்தகாயம் ஏற்பட்ட நபரிடம் ஒரு பெட்டிஷன், அடித்த நபரிடமும் புகார் மனு பெற்றுக் கொண்டு "ரெண்டு பார்ட்டிகளும் சண்டை போட்டிருக்கிறீங்க நீங்க ரெண்டு பேரும் சட்டையை கழட்டுங்க" என்று சொல்ல, பயந்து போன சண்டைக்காரர்கள் இருவரும் போலீசிடம் சரணாகதி அடைந்து, சமாதானமாக போகிறோம் என்று எழுதி கொடுத்து, ஆளுக்கு நூறோ இருநூறோ கொடுக்க போலீஸ்காரர்களின் தொப்பை மட்டும் கணக்கும்.

இதுக்கு கூட தனியாக போக முடியாது? ஒவ்வொரு ஸ்டேசனுக்கும் புரோக்கர்கள் உண்டு. அவர்கள்தான் 'ஆல் இன் ஆல்' பிரச்சனைக்கு ஏற்ப பங்கு உண்டு.

மதுரையிலிருந்து சென்னைக்கு மாடுகள் லாரியில் ஏற்றிவந்தால் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஒவ்வொரு போலீஸ் ஸ்டேசன் முன்பாக டார்ச் லைட்டுடன் தவமிருக்கும் போலீசுக்கு பத்துரூபாய் அழ வேண்டும். இதற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கென்றே 'தானாக்காரன் மாமூல்' என்று 200 ரூபாய்க்கு 10 ரூபாய் நோட்டுகளாக மாற்றி வைத்திருப்பார்கள் லாரி ஓட்டுநர்கள்.

இடையே 'வெள்ளை சட்டைக்காரன்' மோட்டர் சைக்கிளில் இடை மறித்தால் நூறு ஐம்பது வெட்ட வேண்டும். அதுவும் கௌரவமாக டிரிப் நோட் புத்தகத்தின் இரண்டாவது பக்கத்தில் வைத்து கொடுக்க வேண்டும். இப்பொழுதும் கூட கள்ளச்சாரயம் குறையவில்லை.

ஒவ்வொரு கல்லாவுக்கும் சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு இரண்டு வாரத்துக்கு ஆயிரத்தி ஐநூறு. எஸ்.ஐ. 500, ஏட்டுக்கு 50, சாதாரண போலீசுக்கு 10, அப்பாவி போலீசுக்கு 5. ஊர்வலம், பொதுக்கூட்டம், பிணம் எடுப்பது என்று பொழைக்க தெரியாத கேசுகளுக்கு அப்பாவி போலீஸ் என்பர்.

இதில் டி. எஸ்.பிக்கு ஒவ்வொரு ஸ்டேசனும் மாத ஆயிரம் கொடுத்துவிட வேண்டும்.

எஸ்.பிக்கு சர்க்கிளுக்கு பத்தாயிரம் என நிர்ணயிக்கப்பட்ட ரேட்டுகள் உண்டு.

இன்னொரு வேடிக்கை என்னவென்றால் மாமூல் தொகை சில போலீஸ் நிலையங்களில் மொத்தமாக சேகரித்து வாரம், மாதத்திற்கு என்று சம்பளம்போல் கொடுக்கப்படும்.

சில காவல் நிலையங்களில் அவரவர் திறமைக்கு தக்க ஊதியம் பெறலாம்.

தனித்தனியாக வசூல் செய்வதால் எஸ்.ஐ கோஷ்டி, ஒவ்வொறு ஏட்டுக்கும் ஒரு கோஷ்டி என பிரிந்து இவர்களே மேலதிகாரிகளுக்கு பெட்டிஷன் போடுவது உண்டு.

அல்லது காவல் நிலையத்திலேயே கட்டிப் பிடித்து உருள்வதும் உண்டு.

இவ்வளவு நடக்குதே! இதை கேட்க நாதி இல்லையா?

போலீஸ்காரர்களை கண்காணிக்க ஒவ்வொரு காவல் நிலையத்துக்கும் ஒரு எஸ். பி. சி.ஐ.டி—ஐ.ஜி, சி.ஐ.டி-இருப்பார்கள் அவர்கள் மேலதிகாரிகளுக்கு ரிப்போர்ட் அனுப்பாமல் இருக்க லஞ்ச பணத்தில் அவர்களுக்கும் பங்கு உண்டு.

போலீஸ்காரர்கள் பணம் மட்டும் எதிர்பார்ப்பதில்லை.

எது கைக்கு கிடைக்கிறதோ அது போலீசுக்கு சொந்தம்.

ரிக்ஷாகாரர்கள் போலீஸ்காரன் எவனிடமாவது சவாரிக்கு பணம் பெற்றிருந்தால் அவருக்கு சிறப்பு விருது அளிக்கலாம். எல்லாம் ஓசி சவாரிதான்.

பஸ், ஆட்டோ, டாக்சி, லாரி என்று அனைத்திலும் ஓசிதான்.

காய்கறி இறக்கும் தொழிலாளர்கள் போலீசுக்கு மாமூல் கொடுக்க மூட்டைகளில் ஓட்டை போட்டு தானம் செய்வதுண்டு.

மனைவிமார்களின் (போலீசார் பெரும்பாலோருக்கு பல சின்ன வீடுகள் உண்டு) கூந்தலை அலங்கரிக்கும் பூ கூட பூக்காரிகளின் வயிற்றெறிச்சல்தான்.

பாவப்பட்ட வேசிகளிடம் காசையும் வாங்கிக் கொண்டு தன் அரிப்பை தீர்த்துக் கொள்ளும் மிருகப் பிறவிகள் கூட காக்கிச் சட்டைகளுக்குள் தஞ்சம்.

போலீஸ் ஸ்டேசன் உள்ளே கால் எடுத்து வைத்தவுடனே ஒரு குயர் பேப்பர் வாங்கிவா! புகார் கொடுத்த நபரிடம் ஆட்டோ, டாக்சி கொண்டுவா, டீ, கூல்டிரிங்ஸ் சொல் என்று, நபரின் தொழில், கல்வி, என்றுகூட பார்க்காமல் கொள்ளையடிக்கும் போலீஸ் தமிழகம் முழுவதும் பட்டி தொட்டியெல்லாம் பிரசன்னம்.

எந்த விதத்திலும் வருமானம் இல்லை என்றால் விளக்கு இல்லாத சைக்கிளை பிடிப்பது, சினிமா பார்த்துவிட்டு செல்வோரை மடக்கி பணம் பறிப்பது என்ற போலீசின் வழிப்பறி ஏராளம்.

தொழிலாளர்கள் போராடுகின்றபொழுது முதலாளிகளிடம் பணம் வாங்கிக் கொண்டு கருங்காலிகளை உருவாக்குவதும் போலீஸ், தொழிலாளர்கள் அடித்து பொய் வழக்கு போட்டு உள்ளே தள்ளுவதும் இவர்களின் கைங்கரியம்தான்.

அதுமட்டுமல்ல! மூன்று சீட்டு சூதாட்டக் கிளப், நாடா குத்துவது, காட்டன் விளையாட்டு, தம்போலா என அனைத்து சமூக விரோத செயல்களையும் ஊக்குவிக்கும் 'ஜீவன் டோன்' போலீஸ்தான்.

ப்பாரின்...கூட்ஸ என்று எய்த்து விற்கும் வியாபாரிகளின் கொள்ளையிலும் போலீசின் விஷ கைகள் படர்ந்திருக்கும்.

ஏமாந்தவர் அருகில் உள்ள போலீஸ் நிலையத்தில் ரிப்போர்ட் கொடுத்தால்— ஏமாற்றிய நபரை பிடித்து சில நொடிகளில் ராஜ உபச்சாரத்தோடு வந்த வழியே அனுப்பி விடுவதும் இந்த சட்ட புலிகளின் சாம்ராஜ்யத்தில்தான்.

சாதாரண பாமர மக்கள், போலீஸ் நிலையத்திற்கு போக வேண்டும் என்றால்கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

500 ரூபாய் இருந்தால்தான் முடியும் என்ற கேவலம் தமிழகத்தில் நிலவுகிறது.

சங்கம் வேண்டும் என்று போராடி ஓய்ந்து போன போலீஸ்காரர்கள் ஆளுங்கட்சி அரசியல் வாதிகளின் ஆட்டத்தில் மாட்டும் குரங்காகி வதைக்கப்படுவதும் தொடர்கிறது.

லஞ்சம் வாங்கும் போலீஸ் தன் மேலதிகாரிகளை திருப்தி செய்ய பணம் வசூல் செய்து கொடுப்பது முதல், அழகிய மங்கைகளை செட்டப் செய்து அனுப்புவது உண்டு.

அதிகாரிகளை சாந்தப்படுத்த முடியாத போலீசார், நேர்மையான சிலரை மாதம் ஒரு முறை மாற்றுவதும், தண்டனை என்ற பெயரால் தண்ணி இல்லாத (மாமூல் கிடைக்காத ஸ்டேசன்) காட்டுக்கு அனுப்புவதாலும், டிரான்ஸ்பர் விஷயத்திற்காக கூட எஸ். பி., டி.எஸ்.பி. என அதிக உயர் அதிகாரிகளுக்கு 5 ஆயிரம், பத்தாயிரம் என போலீஸ்காரர்கள் அழுது கொட்டுவதும் கொடுமை.

விவசாயி, தொழிலாளிகள் பிள்ளைகளான காவலர்கள் அப்பாவி மக்களை வதைக்கும் போக்கை விட்டு சமூக நோக்கோடு மக்களுடன் கைகோர்க்கும் காலம் விரைவில் மலர வேண்டும்.

—ஜேம்ஸ்


தரத்தில் சிறந்தது

கண்ணன் சோடா கலர் லெமன் ஒன்றே!

**M. இராமர்**
கண்ணன் சோடா கம்பெனி
திருத்தங்கல் - சிவகாசி.



*வாழ்த்துகள்*

**பாலன் இன்ஜினியரிங்
கம்பெனி**

54, குப்புசாமி ராஜா தெரு,
தென்காசி ரோடு,
இராஜபாளையம்-626117.



'போராடும் புதிய இளைஞன்'
தொடர்ந்து முன்னேற பாடுபடும்
அன்பர்களுக்கு என்றும் எங்கள் வாழ்த்துகள்

**எஸ். எஸ். பிரிண்டர்ஸ்**

*386, ஆலமரத்துப்பட்டி ரோடு,
திருத்தங்கல்-626130.*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# “பாக்கெட்டுகளில் போதை விற்பனை தி.மு.க.வின் மலிவு அரசியல்”

வந்துவிட்டது! நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் வந்துவிட்டது. ஆனால் இந்த முறை நுகர்வோரின் வசதியை முன்னிட்டு சின்னச்சின்ன பாக்கெட்டுகளில் கிடைக்கிறது. 100 மில்லி 4ரூபாய் 50 காசுகள்! அடேங்கப்பா! கள்ளச்சாராயத்தை விட விலை அதிகம் என்று பார்க்கிறீர்களா? ஆம்! கள்ளச்சாராயத்தை ஒழிக்கும் நோக்கத்துடன் நல்ல (!) சாராயத்தை விற்க தி,மு.க. அரசு அனுமதியளித்த தன் எதிரொலியாக, சென்னை, செங்கை—அண்ணா மாவட்டங்களில் முதல்கட்டமாக 7000 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தி.மு.க. அரசு இதற்கு ‘மலிவுவிலை மதுத் திட்டம்’ எனப் பெயர் சூட்டியுள்ளது. அன்றாடம் மக்கள் உபயோகிக்கும் அத்யாவசியப் பொருட்களின் விலை நாளுக்கு நாள் ஏறி வருகின்ற நிலையில், உடலுக்கும், உள்ளத்துக்கும் அதன் மூலம் சமூகத்துக்கும் கேடு பயக்கக் கூடிய சாராயத்தை ‘மலிவு’ விலையில் விற்க முன்வந்திருக்கும் தமிழக அரசின் முயற்சி வேதனை நிறைந்த உண்மைதான்.

### ஒரு கல்லில் 2 மாங்காய்

கடந்த மார்ச் மாதம் சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட தமிழக பட்ஜெட்டில் ரூ. 510·10 கோடி துண்டு விழுந்தது. இந்தப் பற்றாக்குறையை ஈடுகட்ட என்ன செய்யலாம்? பல வழிகள் இருக்கின்றன. அதில் ஒன்று தான் மதுவிலக்கைத் தளர்த்துவது. இதன் வாயிலாக அரசுக்கு ரூ. 180 கோடி வருமானம் கிடைக்கும். அத்துடன் கள்ளச்சாராயத்தையும் ஒழிக்கலாம். ஒரு கல்லில் இரண்டு மாங்காய். இதுதான் மதுவிலக்கைத் தளர்த்தியதற்கு, முதல்வர் கருணாநிதி அளித்த விளக்கம்.

நடைமுறையில் அவர் சொன்ன பலன்கள் கிடைப்பதற்கு சாத்தியமிருக்கிறதா? கஷ்டம் தான்! சாராயக்கடைகளை ஏலம் விடுவதன் மூலம் ரூ. 180 கோடி வருமானம் வேண்டுமானால் கிடைக்கலாம். ஆனால் அது மட்டுமே போதுமா? சாராயக்கடைகளை மீண்டும் திறப்பதால் உண்டாகும் எதிர்விளைவுகள் எத்தனை, எத்தனை?

### எது நல்லது? எது கெட்டது?

ஏலம் விடுவதில் கட்சிக்காரர்களுக்கு சலுகை ஒரு சிலர் மட்டும் ஏகபோகம் கொண்டாடுவது (அந்தந்த பகுதிகளில் உள்ள கள்ளச் சாராய வியபாரிகளே ‘பினாமி’கள் மூலம் நல்ல சாராய விற்பனையையும் வாங்கி வைத்துக் கொண்டு . . . நல்லதை கெட்டதுடன் கலந்து, கொள்ளையடிப்பார்கள்தானே) அதிகாரிகளுக்கு லஞ்சம், ஆளும் கட்சியனரின் தலையீடு இப்படி எத்தனையோ கொடுமைகள்.

### தோல்வியா ? சரணாகதியா?

ஆட்சிக்கு வந்த புதிதில் சாராய சாம்ராஜ்யத்தை வேரோடு சாய்க்கப் போகிறேன் என்று மார்தட்டிய கருணாநிதி இன்று மீண்டும் சாராயக் கடைகளை திறந்து விடுவது, சாராய சாம்ராஜ்யத்தின் முன் அவரது தோல்வியையே (அல்லது சரணாகதியாகக்கூட இருக்கலாம்) காட்டுகிறது.

### பிரச்சாரம் பலன் தருமா?

இன்னொரு விஷயம் மதுவிலக்குப் பிரசாரக் குழு. அதாவது ஒருபுறம் சாராயக் கடைகளை திறந்து விட்டிருக்கும் அதே நேரத்தில் மதுப் பழக்கத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதற்கானஒரு குழுவையும் அமைத்திருக்கிறார் கருணாநிதி. நல்ல விஷயம்தான். கருணாநிதியின் இத்த நடவடிக்கை இன்றைக்கு அவருக்குள்ள நெருக்கடியின் பிரதிபலிப்பே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனக் கொள்ளலாம். ஏனெனில் அவர் இரண்டு சாராரையும் திருப்திபடுத்த வேண்டியுள்ளது.

மதுப்பழக்கத்துக்கு எதிராக மக்களை திசை திருப்பும் பிரச்சாரத்தில் கருணாநிதி நியமித்த குழு எப்படிச் செயலாற்றப் போகிறது என்பதை ஒட்டித்தான் பலனும் கிடைக்கும். அப்படியே பலன் எதுவும் கிட்டினாலும் அது சொற்பமாகத் தானிருக்கும்.

**அரசியல் லாபமே அடிப்படை!**

ஆக, இந்தப் பின்னணியில் யோசிக்கும் போது தனது அரசியல் லாபத்துக்காகத்தான் கருணாநிதி சாராயக்கடைகளுக்கு சட்டப்பூர்வ அந்தஸ்து தந்திருக்கிறார் என்றுதான் புரிந்து கொள்ள முடிகிறது. 'மலிவு விலை' மது மூலம் தனது அரசியல் எதிரிகளை பலவீனப் படுத்தவும் அவர்களுக்குத் துணை போகும் சமூக விரோத சக்திகளை தன் பக்கம் ஈர்த்துக் கொள்ளவும் கருணாநிதி எடுத்த முயற்சியே இது எனக் கூறலாம்.

**ஆடத் தெரியாத...**

நாட்டில் எல்லா மாநிலங்களிலும், குஜராத் நீங்களாக மதுவிலக்கு அமலில்லை. அதனால் தமிழகத்தில் மட்டும் அதை அமல் படுத்துவது கடினம் என்று சப்பைக்கட்டு கட்டுகிறார் கருணாநிதி. இந்தத் தருணத்தில் ஒரு விஷயத்தை அவர் யோசித்துப் பார்க்க வேண்டும். நாட்டிலேயே முதன்முதலில் மதுவிலக்கை அமுல்படுத்திய மாநிலம் என்ற பெருமை தமிழகத்துக்குத்தான் உண்டு. அதாவது எந்த மாநிலத்திலும் மதுவிலக்கு அமல் இல்லாத சமயத்தில் தமிழகம் மட்டுமே அந்த விஷயத்தில் முன்னோடியாக இருந்திருக்கிறது. ராஜாஜி அமல்படுத்திய மதுவிலக்கை முதன்முதலில் தளர்த்திய 'பெருமை' கருணாநிதிக்குத்தான். அவரேதான் இன்று மீண்டும் ஆட்சிக்கு வந்த பிறகு அதையே செய்திருக்கிறார். இவற்றிலிருந்து ஒன்று மட்டும் தெளிவாகிறது. மது விலக்கை முழுமூச்சாக அமல் செய்யும் அரசியல் உறுதியும் தார்மீகப் பிடிப்பும் கருணாநிதிக்கு இல்லை என்பதுதான் அது.

**போதை இறக்குமதி!**

நாகரீகம் வளர வளர கிராமப்புறங்களில் டீக்கடைகளும் சிறு சிறு ஹோட்டல்களும் உருவாயின. ஆனால், அவைகளால் கிராமப்புறத்திலுள்ள ஒழுக்க நெறியும், தார்மீகச் சூழலும் எந்த விதத்திலும் மாசுபடவில்லை. ஆனால், இன்று ஆயிரக்கணக்கான சாராயக் கடைகளை மூலைக்கு மூலை திறப்பதன் மூலம், நாளைய சந்ததிக்கான ஒரு மோசமான கலாசாரம் கிராமப்புறங்களில் இறக்குமதி செய்யப்படுகிறது.




**சாராயத்திடம் தோற்ற கள்!**

கிராம மக்களில் பெரும்பாலோர் 'போதை' எனறால் 'கள்' அருந்துவதுதான் வழக்கம். இதற்கு மாறாக இன்று சாராயம் குடிப்பதற்கும் அவர்கள் நிர்பந்திக்கப்படுகிறார்கள்.

இன்னொரு வகையில் சொன்னால், கள் குடிப்பவனுக்கு அதைக் குடிக்கும் உரிமையை மறுப்பது ஜனநாயக விரோதம். அதே நேரத்தில் அவனை சாராயம் குடிக்கக் சொல்லி நிர்பந்திப்பது அதைவிட அநியாயம். இதுதான் இன்று நடந்து கொண்டிருக்கிறது.

சாராய உற்பத்தி, பாட்டில்கள், பாக்கெட்டுகளில் சாராயத்தை அடைத்தல், விநியோகம், விற்பனை என்று பல்வேறுமட்டங்களில் வேலை வாய்ப்பு பலருக்கு கிடைக்கிறது என்று கூறுகிறார் கருணாநிதி. ஒரு வாதத்துக்கு இதை ஒப்புக் கொண்டாலும், கள்ளுக் கடைகளைத் திறந்தால் இதைவிட அதிகம் பேருக்கு குறிப்பாக, பனைத் தொழிலையே நம்பியிருக்கும் ஏராளமான கிராமப் புறத்தினருக்கு வேலை வாய்ப்பளிக்க முடியும். தென்மாவட்டக் கிரா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பாரதிதாசன் சந்தித்த 'சிங்கம்'

**பாரதிதாசனுக்கும், ஜீவாவுக்கும் இடையேயிருந்த நெருக்கம் பற்றி பலருக்குத் தெரியாது. அந்த நெருக்கத்துக்கு ஒரு சின்ன எடுத்துக்காட்டுதான் இது. த. கோவேந்தன் எழுதிய 'பாவேந்தம்' என்ற நூலில் தனித்தமிழ்நடையில் விவரிக்கப்பட்டுள்ள ஒரு காட்சியைத் தான் இங்கே பிரசுரித்துள்ளோம். சிறையிலிருக்கும் ஜீவாவை சந்திக்க பாரதிதாசனை அழைத்துச் செல்லும் தங்கவேலு, நூலின் ஆசிரியர் கோவேந்தனின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.**



1948-இல் ஒரு முறை பாவேந்தர் வேலூர் வந்திருந்தார். எங்கள் வீட்டு விருந்தாளி. தந்தையாரோடு பேசிக் கொண்டிருந்தவர், திடீரென்று 'ஏன்'பா தங்கவேலு, சீவானந்தம் உங்க ஊர் சிறையில்தானே இருக்கான், போய் பார்க்க'ணும் ஏற்பாடு செய்' என்றார்.

என் தந்தைளார் சிறையிலிருப்பவர்கட்கு அறிவுரை கூறி சிறையிலிருப்பவர் மனந் திருந்த ஏற்பாடு செய்திருந்தவர்களில் ஒருவர். அவர் சிறைக்குச் செல்கையில் தோழர் சீவானந்தம் விரும்பும் புத்தகங்களைத் தருவார். உள்ளே செல்லும் வழி தெரிந்த பாவேந்தர் சீவாவைப், பார்க்க் வேட்கைக் கொண்டார்.

எந்தையார் என்னை ஊரீசு உயர்நிலைப் பள்ளியில் பணி புரிந்த திரு. இராமுலசு (அன்று

---

மங்கள் இதனால் பெரும்பலனடையும். மேலும் இது தமிழகத்திலிருக்கும் பனை வளத்தை பயன் படுத்திக்கொள்ளும் முயற்சியாக இருக்கும்.

ஆனால், அதனாலெல்லாம் தி,மு.க.வுக்கோ, கருணாநிதிக்கோ அதிக லாபம் கிடைக்கப் போவதில்லை. கருணாநிதி இதை நன்கறிந் தவர். அதனால்தான் கள்ளை விட்டுவிட்டு சாராயத்தை நாடியிருக்கிறார்.

வீதிக்கு வீதி சாராயக் கடைகளை திறந் திருப்பதன் விளைளாக, வளரும் சந்ததியினர் எளிதாக 'போதை'க்கு அடிமையாவதற்கு வாசல் திறந்து விட்டிருக்கிறார் கருணாநிதி.

கள்ளச்சாராய வியாபாரிகள், அவர்களுக்கு பக்க பலமாய் இருக்கும் குண்டர்கள், இவர்க ளிருவரிடமும் 'செல்லமாய்' நடந்து கொள்ளும் போலீஸ் அதிகாரிகள், இவர்கள் எல்லோருக்கும் மேலாக ஆங்காங்கே 'கோலோச்சிக் கொண்டி ருக்கும்' கழகக் கண்மணிகள். இத்தனை பேரின் 'பாசமும்' கருணாநிதிக்கு உண்டென்பது உறுதியாகிறது. அதே போல் இவர்கள் அத்தனை பேர் மேலும் கருணாநிதி கொண் டுள்ள 'பரிவு' அவரது அரசியல் இயலாமை யையே அம்பலப்படுத்துகிறது என்றுதான் புரிந்து கொள்ள வேண்டும்.

—பாரதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**இந்திய விடுதலைக்குப் போராடின உண்மையான, தொண்டன் உள்ளே இருக்கான் துப்புகெட்டதெல்லாம் சுதந்திரம் கொண்டாடுதுங்க.**

சிறைக்குச் சென்று கிறித்துவின் அறிவுரை கூறுகிற நாள்) அவரை வீட்டில் அவசியமாய் இருக்கக் கூறி, என்னை மிதிவண்டி கொண்டு செல்லப் பணித்தார். திரும்புகையில் குதிரை வண்டியுடன் வந்தேன்.

பாவேந்தர் முன்னே ஏறிக்கொண்டார், பின்னால் என் தந்தையார்—நான் ஓர் ஓரத்தில். திரு. இராமுலசு வீட்டின் குறட்டில் தூய திருநூலுடன் (வேதாகமம்) நின்றிருந்தார்—அவரையும் ஏற்றிக்கொண்டது வண்டி. துறைப் பாடிச் சிறைக்கு விரைந்தோம்.

திரு. இராமுலசும், எந்தையரும் சென்று உள்ளே செல்ல ஒப்புதல் வாங்கி வந்தனர். நால்வரும் சிறைக்கூடத்திலுள்ளே சென்றோம். அதிகாரி ஒவ்வோரிடமாகக் காட்டி ஏதேதோ கூறிவந்தார். 'இதப்பா, இதெல்லாம் கிடக்கட்டும் என் சீவா இருக்கும் இடத்தை முதலிலே காட்டு, மத்தது பின்னாலே' என்றார் தமக்கே உரிய மிடுக்குடன். சுற்றி வளைத்துப் பத்துப் பதினைந்து நிமிடங்கட்குப் பின் சீவாவைக் கண்டார் பாவேந்தர். அவர் அப்படியே கண் கலங்கப் பாவலரை அணைத்துக்கொண்டார். சற்று நேரம் அமைதி நிலவியது – எங்களைச் சற்று ஒதுக்கி இருவரும் தள்ளி நின்று ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். பாவலர் தம் கையி லிருந்த வெண் சுருட்டு (50 கொண்ட தகர அடைப்பியைத்) தந்து நம்ம தோழர்கட்குக் கொடு என்று தோள்மீது தட்டிக் கொடுத்து, தைரியமா இருக்க, நானா சொல்லித்தர'னும்? இந்த காங்கிரசுக்காரனுங்கள ஒரு கை பார்ப் போம் என்று மீண்டார்.

வேறிடங்களை அதிகாரி காட்ட விரும்பிய போது, 'தேவையில்லை. உங்கக் கொடுமை யைப் பார்க்கிறதுக்கு வர்ல, சிங்கத்தைப் பார்க்க வந்தேன். தங்கவேலு புறப்படு' என்று கூறிக்கொண்டே சிறை வாயிலுக்கு வந்து விட்டார்.

குதிரை வண்டியில் ஏறினோம், 'என்ன தங்கவேலு, இந்திய விடுதலைக்கும் போராடின உண்மையான, தொண்டன் உள்ளே இருக்கான் துப்புகெட்டதெல்லாம் சுதந்திரம் கொண்டாடு துங்க. இதிலிருந்து என்ன தெரியுது? சீவா போன்ற நம்ம ஆளுங்க விடுதலை அடைந்து ஆட்சிக்குவர்ற நாள்தான் இந்தியா விடுதலை அடைஞ்ச நாள். இப்ப வந்திருக்கே சுதந்திரம்; வடக்கத்தியானுங்க நம்ம மிதிக்கக் கிடைச்ச நாள். என்ன நான் சொல்'றேன், நீ சும்மா இருக்கே?' என்றார். ஏனோ என் தந்தையார் மறு மொழியே பேசவில்லை.

(த. கோவேந்தன் எழுதிய பாவேந்தம் எனும் நூலிலிருந்து)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# இளைஞனே! இன்னுமா சலனமில்லா உறக்கம்?

இடாவா! இந்தியா சுதந்திரம் அடைந்ததும் மேற்கொள்ளப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டப்பகுதி. அண்மையில் இங்கு ஒரு ஆய்வு நடத்தப்பட்டது. பிறக்கும் குழந்தைகளில் ஆயிரத்துக்கு 159 பேர் அற்ப ஆயுளில் மடிந்து விடுகின்றன. நூற்றுக்கு 40 குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை அது அம்பலப்படுத்தியது. இது மட்டுமல்ல ! நாட்டில் பாதிப்பேர் ஒரு வேளை உணவுக்குக்கூட திண்டாட வேண்டியுள்ளது. சுமார் மூன்றில் இரு பகுதி இந்தியர்கள் எழுதப் படிக்கத் தெரியாதவர்கள்; அப்படியே படித்தவர்களில்கூட 320 லட்சம் பேருக்கு வேலையில்லை. நாட்டு மக்களில் நாலில் ஒரு பகுதியினருக்கு ஓர் அங்குலம்கூட நிலம் இல்லை. அவர்கள் விவசாயக் கூலிகள்.

ஆனால் இதைப்பற்றி எந்தவித அக்கறையுமின்றி ஒரு சிறிய கூட்டம் ஆடம்பர சுகபோகத்தில் கூத்தடிக்கின்றது. இவர்களுக்காகவே நாட்டின் தொழில் கொள்கைகள், வளர்ச்சித் திட்டங்கள் வளைக்கப்படுகின்றன. நாட்டின் தொழில் நிறுவனங்கள் ஒரு சில குடும்பங்கள் பன்னாட்டு கம்பெனிகளின் ஏகபோகக் கட்டுப்பாட்டில் உள்ளன. இவர்களும், இவர்களின் எடுபிடிகளும், அரசியல் ஏஜென்டுகளும் அதிகார வர்க்கக் கும்பலும் அடிக்கும் கொட்டம் அளவே இல்லாமல் வளர்ந்து வருகிறது.

ஒண்டக் குடிசையின்றி கோடான கோடி மக்கள் பரிதவிக்கும்போது, இந்தக் கூட்டத்தை சேர்ந்த குலக்கொழுந்துகள் 5 நட்சத்திர ஹோட்டலில் ஓர் இரவுக்கு மட்டும் 1500 ரூபாய் வாடகை கொடுத்து உல்லாசமாய் களிக்கின்றனர். எளியோருக்கு வீடு வசதி அளிபபது பற்றி அரசு வாய்ப்பந்தல் போடும் அதே நேரத்தில் ஆடம்பர ஹோட்டல்கள் கட்டும் திட்டங்களுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் வாரி வழங்கப்பட்டு வருகின்றன.

இப்போது இந்தக் கூட்டத்துடன் நடுத்தர வர்க்கத்தின் மேட்டுக் குடியினரும் சேர்ந்து



www.tamilarangam.net

## கொழுத்த பணத்தின் கொட்டம்

செல்வச் செழிப்பின் இந்தக் கும்மாளம் எல்லாம் சாதாரணம் என்பது போல பம்பாயில் ஒரு கறுப்புப் பணத் திமிங்கலம் கடந்த ஆண்டு தனது கைக் கடிகாரத்தில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்புள்ள வைரங்களைப் பதித்துக்கொண்டது. நாட்டில் புழங்கும் கறுப்புப் பணத்தின் மதிப்பு ரூ. 50,000 கோடி வரை இருக்கலாம் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கறுப்புப் பணப்புள்ளிகள் எந்தவித கூச்சமோ அச்சமோ இல்லாமல் தங்கள் குடும்ப விழாக்களை நடத்தி வருகின்றனர். பம்பாய் வைர வியாபாரி பரத்ஷா கடந்த ஆண்டு 10 கோடி ரூபாய் செலவில் தனது மகளின் திருமணத்தை நடத்தினான். இதற்காக விதி முறைகளை மீறி ''கிரிக்கெட் ஸ்டேடியம்'' ஒன்று அவனுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. அதில் அரண்மனை போன்ற ''செட்'' போடப் பட்டது. திருமணத்துக்கான அழைப்பிதழுடன் அன்பளிப்புகளும் அனுப்பப்பட்டன. நாட்டின் கோடானு கோடி மக்களைக் கிண்டல் செய்யும் இந்தப் பணத்திமிருக்கு எதிராகக் கண்டன ஆர்பாட்டம் செய்த தொண்டர்கள் அடித்து நொறுக்கப்பட்டு பிடித்துச் செல்லப்பட்டார் களே தவிர, அந்த பணத்திமிர் பிடித்த சமூக விரோதிகளை போலீஸ் எதுவும் செய்ய வில்லை. இதேபோன்று பி. கே. பிர்லா பேரனின் திருமணத்தின் போது 4 ஐந்து நட்சத்திரஹோட்டல்களில் ஒரு வாரம் விருந்து. திருமணத்துக்குவருவோருக்கு விமானத்தில் வர ''ரிட்டர்ன்டிக்கெட்'' சகிதம் அழைப்பு; பம்பாய் விமான நிலையத்தில் விசேஷ வரவேற்பு மையம். பிரபல ஆடம்பர ஹோட்டல்களில் ஒரு வாரம் வேறு எவரும் தங்கமுடியாத நிலை; கார்களுக்கும் தட்டுப்பாடு.

1987-ம் ஆண்டு போஃபர்ஸ் புகழ் ஹிந்துஜாக்களின் குடும்பத்தில் ஒரு பெண் ணுக்குத் திருமணம். ஆடம்பரச் செலவுக்கு பெயர்போன சர்வதேச ஆயுதக் கடத்தல் புள்ளி 'கசோக்கி'யே ஆச்சரியப்படும் அளவுக்குச் செலவுகள். சில ஆண்டுகளுக்கு முன் செல்லா ராம்ஸ், இல்லத் திருமணதிற்கு சிகை அலங் கார நிபுணர்கள் இங்கிலாந்திலிருந்து பறந்து வந்தார்கள்.

கலைப் பொருள்களை வாங்சி வீட்டில் மாட்டி தங்கள் அந்தஸ்தை தம்பட்டம் அடித்துக் கொள்வது இந்தப் பேர்வழிகளின் இப்போதைய ஃபாஷன்! அண்மையில் பிரபல ஓவியர் ஹீசைன் வரைந்த ஓவியம் ஒன்றை 10 லட்சம் ரூபாய் விலை கொடுத்து வாங்கிய வைர வியாபாரி அருண்குமார் மேத்தாவை நினைவிருக்கிறதா? இவரும் பிரமோத் கோயங்கா என்பவரும் சேர்ந்து 'இன்டர் கோல்ட்' என்ற கம்பெனியை நடத்தி வருகின்றார்கள். இதன் உயர் அதிகாரி ஒருவர் பல நூறு கோடி ரூபாய் மதிப்புள்ள வைரங்களுடன் பம்பாய் விமானநிலையப் பகுதியில் பிடிபட்டார். தனது எஜமானர்களின் ஏவல்படியே இந்தக் காரியத்தைப் புரிந்ததாக அவர் கூறியுள்ளார். இப்போது புரிகிறதா இவர்களின் யோக்கியதை!

கொண்டிருக்கின்றார்கள். இவர்கள் தொழில் நிறுவனங்களில், நிதி ஸ்தாபனங்களில், அரசு நிர்வாகத்தின் மேல் அடுக்குகளில் பதவி வகிப்பவர்கள். கடத்தல், கள்ளமார்க்கெட் கறுப்புப்பண, கொள்ளை லாப வர்த்தககூட்டம், ஆளும் வர்க்க அரசியல் தரகர்கள் ஆகியோரும் இதில் சங்கமம்.

ஊரான் உழைப்பில் உடலை வளர்க்கும் இந்தக் கூட்டம் ஆடம்பரப் பொருள் மோகம் என்றபுதிய கலாச்சாரத்தைப் பரப்பி வருகிறது. இதன் வக்கிரம் இதரஇடைத்தட்டு வர்க்கத்தின ரையும் பீடிக்கும் அபாயம் வளர்ந்து வரு கின்றது.

### ஆடம்பரத்துக்கு புதிய தீனிகள்!

உலகில் தொழில் வளர்ச்சியடைந்த நாடு களின் பணக்காரக் குடும்பங்கள் கூட அனுபவிக் காத ஆடம்பரத்தை இந்தியாவின் இந்தப்புதிய கூட்டம் அனுபவிக்கத் தொடங்கியுள்ளது. இவர்களுக்கென்று தனிக்'கிளப்'புகள், கடைகள், பொழுதுபோக்கு மையங்கள், இவர்களுக் கென்றே வெளிநாட்டு கம்பெனிகளின் கூட்டுற வுடன் ஆடைகள், காலணிகள், அலங்காரப் பொருட்கள், வாகனங்கள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவைக் கருவிகள், மைக்ரோ அடுப்புகள், டி. வி,க்கள், வி.சி.ஆர்கள், கேக்கு கள், ஐஸ்கிரீம்கள்.

பம்பாயில் ''கெம்ப் கார்னர்'' பகுதியில் நவீன ஆடைகள் விற்கும்ஆடம்பரக் கடைகளில் சாமானியர்கள் நுழைந்தால் திருப்பி அனுப்பப் படுவர். இவற்றில் ஒரு பெண் அணியக் கூடிய நைட் கவுன் 10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாய் வரை விற்கப்படுகின்றது. இதர ஆடை களைப்பற்றி சொல்லவே வேண்டாம். எத்தனை மடங்கு விலை கொடுத்தாலும் பரவாயில்லை. இது ஒரு ''ஸ்டேட்டஸ் சிம்பல்'' அவர்களுக்கு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தில்லியில் பணக்காரர்கள் வசதிக்காகவே அமைக்கப் பட்டுள்ள ''ரெடிமேட்''ஆடைக் கடைகளில் ஒன்று ராஜீவ்காந்தியின் நண்பர் சதீஷ் சர்மாவின் மனைவிக்குச் சொந்தமானது. இந்தக் கடையில் குழந்தைகளுக்கான ஒரு 'காட்டன்' சர்ட்டின் விலை 400 ரூபாய். இது வெளிநாட்டு ஒத்துழைப்புடன்தயாரிக்கப்பட்டது

இந்தக் கூட்டத்தினர் வெளிநாடுகளுக்கு உல்லாச பொழுதுபோககு மேற்கொள்வது இப்போதெல்லாம் வாடிக்கையாகிவிட்டது. கடந்த ஆண்டு மட்டும் 25 லட்சம் பேர் வெளி நாட்டுச் சுற்றுலாக்களில் பங்கேற்றுள்ளனர்.

நாட்டில் பாதிப்பேர் அரைப்பட்டினி கிடக்கும் போது இந்தக் கும்பல் ஆடம்பர ஹோட்டல்களில் பணத்தைத் தண்ணீராய்ச் செலவழித்து கொட்டமடிக்கிறது. ஒருவருக்கு ஒருவேளை உணவுக்கு மட்டும் ஆயிரம் ரூபாயானாலும் செலவு செய்கின்றது இந்தக் கும்பல். முன் கூட்டியே ரிசர்வ் செய்து விருந்து அனுபவிக்கிறது. இவர்களுக்காகவே விலை உயர்ந்த மிட்டாய் வகைகள், சீன உணவு வகைகள், ஐஸ்கிரீம்கள் தயாரிக்கப்படுகின்றன.

## வாகன மோகம்

இவர்கள் பயணம் செய்வதற்காவே மாருதி 1000 சிசிரகக் கார்கள் உருவாக்கப்படுகின்றன. குறைந்த விலைக்கார்கள் தயாரிக்கப்போவதாக ஜப்பான் ஒத்துழைப்புடன் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம், தனது புதிய தயாரிப்புக்கு சுமார் 3 லட்ச ரூபாய் விலை நிர்ணயித்துள்ளது. இருந்த போதிலும் அதை வாங்குவதற்கு போட்டா போட்டி. இன்னும் ஒரு வருஷம் கழித்தே வெளிவரக் கூடிய இந்தக் காருக்கு 2·5 லட்சம் பேர் மனுச் செய்துள்ளனர். விண்ணப்ப மனுக்கள் கள்ளமார்க்கெட்டில் விற்கப்பட்டன. டெபாசிட்டாக மட்டும் 625 கோடி ரூபாய் குவிந்தது. இந்தக் கார் வெளியே வந்ததும் கூடுதலாக ஒரு லட்ச ரூபாய் விலை வைத்து விற்க முடியும் என்று மனுச் செய்துள்ள இடைத்தரகர்கள் பலர் நினைக்கின்றார்கள்.

இந்த அளவு பணத்தை முடக்க இயலாத வர்களுக்காக, இருசக்கரவாகனங்கள், அன்னிய ஒத்துழைப்புகளுடன் தயாரிக்கப்படுகின்றன. 1983-ல் ஆண்டுக்கு 4. 39 இலட்சமாக இருந்த மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் உற்பத்தி 1989-ல் 11.54 இலட்சமாக உயர்ந்துள்ளது. நடுத்தர மக்கள் இவற்றை வாங்குவதற்கு வங்கிகள், ஃபைனான்ஸ் கம்பெனிகள் உதவ முன்வந்துள்ளன. எல்லாம் ஒரு ஏற்பாட்டின் பேரில் ஒழுங்காக செயல்படுத்தப்படுகின்றன. இதில் கொள்ளை லாபம் வருவதால் டி.வி.எஸ். எம். ஆர். எப், டைம்ஸ் ஆஃப் இந்தியா, நிறுவனங்கள் கூட நிதிக் கம்பெனிகளை ஆரம்பித்துவிட்டன.

புதுப் பணக்காரர்களுக்காக கலர் டி.வி. வி.சி.ஆர்., வாஷிங் மெஷின், மைக்ரோ அடுப்பு, குளிர்சாதனப்பெட்டி, நவீன பிளாஸ்க், ரைஸ்குக்கர், வாக்குவம் க்ளினர் தயாரிக்கப்படுகின்றன. வாஷிங் மிஷின் 12,000ரூபாய் விலைவைத்தாலும் ஏகப்பட்ட கூட்டம். ஃபாரின் கம்பெனி ஒத்துழைப்புடன் தயாரிக்கும் பொருள்கள் என்றால் அவ்வளவு மோகம். 'இன்று கடன் நாளை ரொக்கம்' என்ற நிதிக் கம்பெனிகளின் விளம்பரம் வேறு இளம் தலைமுறையினரை ஆட்டிப்படைக்கின்றது.

உலகிலேயே மிகப்பெரிய வீடியோ மார்க்கட்டாக இந்தியா உருவாகியுள்ளது. 1984-இல் 2.8 லட்சமாக இருந்த கலர் டி.வி. உற்பத்தி கடந்த ஆண்டு 12 லட்சத்தை எட்டியுள்ளது: வி.சி.ஆர் உற்பத்தி 7.5 லட்சததை தாண்டிவிட்டது. இது தவிர வெளி நாடுகளிலிருந்து ஆயிரக்கணக்கில் வந்து கொண்டிருக்கின்றன. வீடியோ லைப்ரரிகள் மட்டும் ஒரு லட்சம் உள்ளன. மன வக்கிரங்களுக்குத்தீனிபோடும் படங்களை சப்ளைசெய்து இளைஞர்களின் உணர்வுகளைத் திசை திருப்ப இதுதான் சிறந்தவழி என ஆளும் வர்க்கம் நினைக்கின்றது. வெளிநாட்டு ''பிராண்ட்நகளில்'' தயாரிக்கப்படும் ராஸ்ஸர் ஜீன்ஸ், பிளேபாய், பெனட்டன்உடைகள், வான்ஹூஸைன், லூயிஸ் பிலிப்பீ ''ரெடிமேட் ஆடைகள்; பூமா, அடிடாஸ் ஷூக்கள்; சீக்கோ, சிடிஸன், ரோமான்ட் வகை கைக்கடிகாரங்கள் இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்பதைப் போன்ற உணர்வு நடுத்தர வர்க்க இளைஞர்கள் மத்தியில் பரப்பப் படுகிறது.

இந்தியாவின் தனிநபர் சராசரி வருமானம் 2087ரூபாய் என அரசின் புள்ளி விபரங்களே கூறும்போது ஒரு சிறிய கூட்டம் மட்டும் எப்படி இவ்வளவு ஆடம்பரமாகச் சொகுசு வாழ்க்கை நடத்த முடிகின்றது? நாட்டின் பெரும்பகுதி மக்களுக்குப் பாதகமாக இந்தியப் பொருளாதாரத்தை வளைத்து அந்தக் கும்பல் அனைத்து பலன்களையும் அனுபவித்து வருகின்றது என்பதே இதற்குப் பதில்.

இந்த அநீதியைஅகற்ற இளைய தலைமுறை தனது மூளைச் சோம்பலை உதறிவிட்டு, உறக்க நிலையிலிருந்து விழித்தெழுவதும் மற்றவர்களுக்கு விழிப்பூட்டுவதும் அவசியம்.

—மித்ரராய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்நாட்டில் புலிப் பாய்ச்சல்

தமிழ் நாட்டில் விடுதலை புலிகள் இல்லை என்று மூடி மறைத்து வைக்க மேற் கொண்ட எல்லா முயற்சிகளும் ஒரு வழியாக தோல்வி அடைந்துவிட்டன.

கோடம்பாக்கத்தில் ஈழபுரட்சிகர முன்னனி யின் பொதுச் செயலாளர் பத்மநாபா உட்பட 19-பேர் கொல்லப்படவில்லை என்றால் தமிழக முதலமைச்சரின் கெட்டிக்காரத்தனம், ஒரு வேளை வெற்றி அடைந்திருக்கலாம்.

இப்பொழுது விடுதலை புலிகள் தமிழ் நாட்டில் இருக்கிறார்களா? இல்லையா? என்பதைவிட தமிழக முதலமைச்சர் கருணாநிதி யும், அவரது காவல்துறையும் இந்த விஷயத்தை ஏன் மூடிமறைத்தார்கள் என்பதே முக்கியமான கேள்வியாக எழுந்துள்ளது.

கலைஞர் எதைச் செய்தாலும் அதில் ஒரு ராஜதந்திரம் அடங்கியிருக்கும் என்று உடன் பிறப்புகள் நம்புவார்கள். அதைப் போலவே இந்த விஷயத்திலும் ஒரு ராஜதந்திரம் அடங்கி யிருக்கலாம்

கலைஞருக்கு அரசியல் நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் அவருடைய கைக்கு மிகவும் எளிதாக அகப்படும் ஆயுதம் இனஉணர்வுதான். தி.மு.க ஆட்சி இலங்கை தமிழர்களுக்காக எதையும் செய்ய தயங்காத ஆட்சி-என்ற தமிழ் உணர்வை தனக்கு சாதகமாக்கி கலைஞர் கணக்குப் போட்டார்.

விடுதலை புலிகளின் தலைவர் பிரபாகரன் அவ்வளவு எளிதில் தன் மீது நம்பிக்கைவைக்க மாட்டார் என்ற விபரமும் கலைஞருக்கு தெரியும். டெலோ இயக்கத் தலைவர் ஸ்ரீசபா ரெத்தினம், தமிழர் தலைவர் அமிர்தலிங்கம் ஆகியோரின் கொலையில் கலைஞருக்கும் விடுதலை புலிகளுக்கும் கருத்து வேறுபாடு உண்டு.

எம்.ஜி.ஆர் உயிரோடு இருந்தபோது விடுதலை புலிகளின் ஆதரவை யார் பெறுவது என்பதில் கலைஞருக்கும் எம். ஜி. ஆருக்கும் கடுமையான போட்டியே இருந்தது. கடைசியில் எம்.ஜி. ஆரின் நம்பிக்கைக்கு உரியவராக பிரபாகரன் மாறினார்...

...இதனால்தான் கலைஞர் விடுதலை புலி களுக்கு வழங்கிய நிதியைக் கூட, முகத்தில் அறைந்தாற்ப்போல் வாங்க மறுத்துவிட்டார் கள்.

...புதிய சூழ்நிலையில் பிரபாகரனை பல வகையிலும் திருப்தி படுத்துவது கலைஞரின் பிரதான நோக்கமானது.

தேசிய முன்னனி அரசு ஆட்சிக்கு வந்த வுடன் இலங்கைப் பிரச்சனையில் நல்லுறவை உருவாக்கும் பொறுப்பு கலைஞரிடம் ஒப்படைக் கப்பட்டது. புலிகளிடம் உள்ள இடைவெளி யைக் குறைத்துக் கொள்ள இதை ஒரு வாய்ப் பாக கருதினார்.

...வடக்கு-கிழக்கு மாகாணசபை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபை, அதை கலைக்க வேண்டும் என்பது புலிகளின் அப்போதைய முதல் கோரிக்கை. இதே கோரிக்கையைத்தான் வடக்கு-கிழக்கு மாகாண முதல்வர் வரதராஜ பெருமாள் அவரை சந்திக்க வந்தபோதும் முன் வைத்தார்.

இலங்கை தமிழ் போராளிக் குழுக் களிடையே நீதிபதியாக இருந்து செயல்பட வேண்டியவர் ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு வழக்கறிஞராக செயல்பட்டார்.

அமைதிப்படையின் மீது புலிகளுக்கு உள்ள கோபத்தை கலைஞர் நன்கு அறிவார். அமைதி படையை அவமதித்தால் புலிகள் திருப்தி அடைவார்கள் என்று எதிர்ப்பார்த்தார். எனவே தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்பதைக்கூட மறந்துவிட்டு இலங்கையில் தனது பணியை முடித்துவிட்டு திரும்பிய அமைதிப்படையை வரவேற்கும் விழாவில் கலந்துக் கொள்ள மறுத்து விட்டார். ஐயாயிரம் தமிழர்களை கொன்று விட்டு திரும்பிய ராஜிவ் காந்தியின் படை என்று வர்ணித்தார்.

அதே சமயத்தில் பாரத பிரதமர் வி.பி. சிங் அமைதிப்படையை புகழ்ந்து பேசுகிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




புலிகளுக்கு கலைஞர் செய்த இந்த நடவடிக்கையால் அரசியல் ரீதியாக, அவருக்குள்ள மதிப்பு குறையத் துவங்கியது,

வடகிழக்கு மாகாண அமைச்சர்கள் உயர் அலுவலர்கள், அவர்களின் குடும்பத்தினர் ஆகியோர் அமைதிப்படை வெளியேறுவதற்கு முன் இலங்கையை விட்டு வெளியேற வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டது; கப்பல் மூலமாக தமிழகம் வந்த இந்த குழுவில் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப். பொதுச்செயலாளர் பத்மநாபவும் அடங்குவார். இந்த குழுவிற்கு தமிழ்நாட்டில் அனுமதி மறுக்கப்பட்டு, ஒரிஸாவுக்கு அனுப்பபட்டார்கள் இந்த நடவடிக்கை கண்ணியமானதல்ல என்று கலைஞருக்கு தெரிந்திருந்தாலும்கூட புலிகளை மகிழ்விக்க இப்படிப்பட்ட காரியத்தையும் கலைஞர் செய்யத் துணிந்தார்.

கடந்த ஆறுமாத காலமாக தமிழ்நாட்டின் கடற்கரை மிகவும்பதட்டமடைந்து வருவதற்கும் விடுதலை புலிகளே காரணம்.

......மீனவர்களில் சுமார் 700—பேரை மீன் பிடிக்க சென்ற இடத்தில் விடுதலை புலிகள் கைது செய்து யாழ்பாணத்துக்கு கொண்டு சென்று பின் விடுதலை செய்தார்கள். இதனை தமிழக அரசு வன்மையாக கண்டித்திருக்க வேண்டும். ஆனால்' அதற்கு மாறாக கலைஞர் இலங்கை எல்லையில் பிரவேசித்ததால்தான் புலிகள் கைது செய்துள்ளார்கள். எனவே தமிழக எல்லையை கடந்து செல்ல வேண்டாம் என்று நமது மீனவர்களுக்குத்தான் எச்சரிக்கை கொடுத்தார். இதுவும் விடுதலை புலிகளுக்கு ஆதரவான இவரது அணுகுமுறை என்பதை மெய்ப்பிக்கின்றது.

கடற்கரை கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த கோவிந்தராஜ என்ற கஸ்டம்ஸ் அதிகாரியும் நான்கு போலீஸ்காரர்களும் புலிகளால் கடத்தபட்டு 12 தினங்களுக்கு பின் விடுதலை செய்யப்பட்டார்கள். புலிகளின் இந்த நடவடிக்கையை எந்த அரசும் சகித்துக் கொள்ளாது. தமிழகஅரசு சகித்துக் கொண்டது.

இராமநாதபுரம் மாவட்டம் தர்க்கா வலசு என்னும் கிராமத்தில் 4 கோடிரூபாய் பெறுமான முள்ள ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. மிகவும் பதட்டமடைய வேண்டிய விஷயத்தில் மிகவும் நிதானத்துடன் கலைஞர் சொல்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழக அரசின் பேரில் கெட்டபெயர் உரு வாக்க வேண்டும் என்பதற்காக மத்திய புலனாய்வுத்துறை ''ரா''வின் திட்டமிட்ட சதி என்று.

இதைப் போலவே ஆயுதங்களுடன் வந்த போராளிக் குழுவை இராமநாதபுரம் செக் 'போஸ்ட்'டில் போலீசார் தடுத்திருக்கின்றார் கள். அதே இடத்தில் போலீஸ்காரரையும், அவ ருக்கு பக்கத்திலிருந்த மற்றொரு நபரையும் சுட்டுத்தள்ளிவிட்டு தப்பி சென்று விட்டார்கள்.

பட்டுக்கோட்டை தாலுகா, பிள்ளையார் திடல் என்ற இடத்தில் மாருதிவேன் ஒன்று கவிழ்ந்து விட்டது. உதவிக்காக ஓடிய பொது மக்களை புலிகள் துப்பாக்கியை காட்டி மிரட்டி யிருக்கின்றார்கள். வாக்கி டாக்கி மூலம் தொடர்பு கொள்ளப்பட்டு அந்த இடத்திலிருந்து செல்ல வேறு வாகனம் ஏற்பாடு செய்திருக் கின்றார்கள்.

இப்படி ஒன்றா...இரண்டா... அடுக்கடுக் காய் பல சம்பவங்கள், கடைசியாய் ஈ.பி.ஆர். எல்.எப். இயக்கத்தை சார்ந்தவர்களின் படுகொலைக்கு பின்னும் புலிகளை நேரடியாக ஆதரித்தால் ஆபத்து என்பதை உணர்ந்த கலைஞர் தமிழ்நாட்டில் சட்டம்—ஒழுங்கை நிலைநாட்ட இலங்கைப் போராளிகளை வெளி யேற்ற வேண்டும் என்று பொதுவாய் குரல் கொடுக்க துவங்கினார்.

## பிள்ளையார் பிடிக்க...

பிள்ளையார் பிடிக்கக் குரங்கான கதை மாதிரி புலிகளை 'சிக்கென' பிடிக்கச் சென்ற கலைஞர் பல்வேறு சிக்கலுக்குள் மாட்டிக் கொண்டார். தனது செல்வாக்கை மேலும் உறுதியாக்கிகொள்ள எந்தப் புலிகளை நம்பினாரோ அதே புலிகளால் கலைஞருக் குள்ள ''அரசியல் கௌரவம்'' குறையத் துவங் கியது.

புலிகள் தங்களது ராணுவத் தேவைகளை ஈடுகட்ட கடத்தலைத்தான் பிரதானமாக நம்பியிருக்கின்றார்கள். ஆயுதங்கள், போதை மருந்துகள், மிகப்பெரிய அளவில் கடத்தப்படு கின்றன.

பூகோள ரீதியாக தமிழ் நாடுதான் இவர் களின் கடத்தல் வியாபாரத்துக்கு நல்ல மார்கெட்டாக அமைய முடியும். கடத்தல் தொழிலை வெற்றிகரமாக செயல்படுத்த சக்தி வாய்ந்த இந்திய கடத்தல் அமைப்பு தேவைப் படுகிறது. நவீன தொலை தொடர்பு சாதனங் களுடன் கூடிய கடத்தல் புள்ளிகள் தமிழ் நாட்டில் உருவாகி விட்டார்கள்.

போலீஸ், கஸ்டம்ஸ் இவைகளை லஞ்சத் தின் மூலம் மடக்கிவிடுவது கடத்தலின் அடிப் படையான தந்திரம். இந்த இரண்டுதுறைகளில் புலிகளுக்கு மிகவும் நம்பிக்கைக்கு உரிய நபர்கள் செயல்படுகின்றார்கள் என்று சொல்லப்படு கின்றது. இப்படி ஒரு நிலையிருந்தால் நமது அரசாங்கத்தால் எந்த ரகசியத்தை காப்பாற்ற முடியும்?

## துப்பாக்கி கலாச்சாரம்

வேலையில்லாத இளைஞர்கள் பெருமள வில் இந்தச் செயல்களில் ஈடுபடுத்தப்படுகின் றார்கள். கடத்தல் கலாச்சாரம் தமிழ் நாட்டு இளைஞர்களிடம் ஊடுருவி வளருமேயானால் ஒரு மாபெரும் அபாயத்தை சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

பாக்ஜலசந்தியில் மீன் வளத்தைவிட வெடி குண்டுகளின் புகையே ஆதிக்கம் செலுத்து கின்றன. மீன்பிடி படகுகள் அச்சத்தின் காரணமாக கடலுக்கு செல்வதில்லை. இந்த படகுகளை கடத்தல்காரர்கள் வாடகைக்கு அமர்த்திக் கொள்கிறார்களாம்.

தமிழ் நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக கொலை, கொள்ளை கூடுதலாகி உள்ளது. இந்த சமூக விரோத நடவடிக்கைகளில் துப்பாக்கி கள் மிகவும் சர்வசாதரணமாக பயன்படுத்தப் படுகின்றன. இந்த சம்பவங்களில்—ஈழப் போராளிகள் நேரடியாக சம்பந்தப்பட்டிருக் கின்றார்கள் அல்லது இவர்களின் துப்பாக்கி கலாச்சாரத்துக்கு இரையான இளைஞர்கள் சம்பந்தப்பட்டிருக்கின்றார்கள்.

வேடிக்கை என்னவென்றால் ஏ.கே 47 துப்பாக்கிக்கு தேவையான உதிரிபாகங்கள் கோயம்புத்தூரில் செய்யப்படுகின்றதாம். சில இளைஞர்கள் இது தொடர்பாக கைதும் செய்யப் பட்டுள்ளார்கள். இதைப் போலவே தர்மபுரி மாவட்டத்தில் ரகசிய துப்பாக்கி தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் தேசிய இனங்களின் பிரச்சினை மிக அடிப்படையானது. தமிழ் தேசிய இனத்திற்கு உள்ள உரிமைகளை பெறவும், பெற்ற உரிமைகளை வலுவாக்கவும் தொடர்ந்து செயல்படுவது அவசியம். ஆனால் மத்திய அரசாங்கத்தை பலவீனப்படுத்துவதும் பிரிவினை கோரிக்கைகளும், நம் ஒற்றுமைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் உகந்ததல்ல. அண்மைக் காலத்தில் புதிய நிலைமையில் அங்கொன்றும் இங்கொன்றுமாக பிரிவினைக் குரல் கேட்டு கொண்டிருக்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்திய எல்லைப் புறங்கள் கடுமையான நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், எந்தவிதமான ஆபத்தும் இல்லாத தென்பகுதியில் இத்தகைய சூழ்நிலை எல்லோருக்கும் அச்சத்தை தருவதாக அமைந்துள்ளது. இலங்கைப் பிரச்சினையை தீர்ப்பது தமிழ் நாட்டுக்கு எவ்வளவு முக்கியமோ, அவ்வளவு முக்கியம் இந்தியாவின் ஒற்றுமையும் ஒருமைப்பாட்டையும் பாதுகாப்பதும் ஆகும்.

## புதிய கோபாலசாமிகள்

இதை ஆளுங்கட்சியான தி.மு.க உணர்ந்ததாகத் தெரியவில்லை. பாராளுமன்ற உறுப்பினர் திரு. கோபாலசாமி பாஸ்போர்ட், விசா இல்லாமல் இலங்கை சென்று புலிகளின் தலைவர் பிரபாகரனை சந்தித்து பெரும் பரப்பரப்பை உருவாக்கினார். அமைதிப்படையினரால்தமிழகத்துக்குஅழைத்து வரப்பட்ட கோபாலசாமியின் இந்த நடவடிக்கையை கலைஞர் அப்போது உற்சாகப்படுத்தவில்லை. ஆனால் தமிழ்நாடு சட்ட சபையில், அமைதிப்படை பற்றிய விவாதம் வந்தபோது, ஆளுங்கட்சி உறுப்பினர்கள் விடுதலைப் புலி பிரபாகரன் வாழ்க-என்று கலைஞர் முன்னிலையிலேயே கோஷமிட்டார்கள். ஒரு கோபாலசாமியை கட்டுபடுத்துவது போல் பாவனை செய்துவிட்டு பல கோபாலசாமிகளை கலைஞர் உருவாக்குகின்றார் என்பதே இதன் பொருள் ஆகும்.

மொத்தத்தில் இலங்கை வாழ் தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு என்ற பெயரால் சில மோசமான சக்திகளுக்கு ஊக்கம் கொடுத்ததால் தமிழ் நாடு ரணகளமாக மாறிவருகின்றது;

என்னதான் தங்கள் தவறுகளை மூடி மறைத்து வைக்க, கழக உடன்பிறப்புகளையும், காவல்துறையையும். கட்சி அதிகாரத்தையும் பயன்படுத்தினாலும், கலைஞர் செய்த தவறுகள் கட்டி சோற்றுக்குளிருந்த பூனையாக, வெளியே தலைகாட்டிவிட்டது.

எவன் ஒருவன் தவறுகளை பகிரங்கமாக ஏற்றுக் கொள்கிறானோ அவனை ஒரு மாபெரும் வீரன் என்கிறார்கள். இலங்கை பிரச்சினையில், தனது தவறுகளை உணர்ந்து, இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை தீர இந்தியா ஒரு அரசியல் தீர்வுக்கு முயற்சிக்க கலைஞர் உதவுவாராக.

அப்படி உதவி செய்தால், இதுவரை அவருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் எல்லாவற்றையும் விட சிறந்த பட்டத்தை தமிழக மக்கள், அவருக்கு வழங்குவார்கள்.

—மித்ரன்


சாதி, மத சண்டைகளுக்கு எதிராக
குரல் கொடுக்கும்

''போராடும் புதிய இளைஞன்''

வாழ்க! வளர்க !

**N. ஆனந்தம்**
மீனாம்பிகை ரோட்வேஸ்
அருப்புக்கோட்டை.

போராடும் புதிய இளைஞனை
வாழ்த்துகிறோம்.

**ஒலிம்பிக் தியேட்டர்**
சிவகாசி.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அஞ்சலி

தமிழில் நல்ல சினிமா வருவது மிகவும் அபூர்வமாகிவிட்ட ஒன்று. பாரதிராஜாவின் 'என்னுயிர்த்தோழன்' விக்ரமனின் 'புதுவசந்தம், வி. சேகரின் (முருங்கைகாயின் மகத்துவத்தை கண்டறிந்த பாக்யராஜிடம் உதவியாளராக இருந்தவராம்! நம்பமுடியவில்லை) 'நீங்களும் ஹீரோ தான்' இப்படி ஒரு சில படங்கள்... அரிதாக வெளியாகி சினிமா மக்களுக்கான கலைச்சாதனம் என்பதை நினைவுபடுத்து கின்றன...சரி! இது போகட்டும்! விஷயத்துக்கு வருவோம்.

அஞ்சலி...அஞ்சலி...அஞ்சலி... இன்று தமிழகமெங்கும் பரபரப்பாகப் பேசப்படும் படம். பத்திரிகைகள் எல்லாம் ஆகா! அற்புதம் என்று புகழ்ந்து தள்ளிக் கொண்டிருக்கும் படம். தமிழ்த் திரைப்பட உலகில் சர்வ வல்லமை கொண்டவராகத் திகழும் ஜீ.வி.யின் சொந்தப் படம்.

புற்றீசல் போன்று வெளிவரும் மசாலாப் படங்கள் படிப்பறிவில்லாத, பாமர மக்களை மோசமான ரசிப்புத்தன்மைக்கு அடிமையாக்கிக் கொண்டிருக்கும் வேளையில், படித்த நடுத்தர மற்றும் மேல்தட்டு வர்க்கத்தனரின் வக்கிரங் களுக்கும், போலித்தனங்களுக்கும் கலை அந்தஸ்து பெற்றுத்தர புறப்பட்டவர்தான் இந்த மணிரத்னம். (ஒன்றிரண்டு படங்கள் விதிவிலக்கு.) அவர்தான் அஞ்சலியையும் இயக்கியிருக்கிறார்.

படத்தில் நல்ல விஷயங்கள் என்று சொன்னால் அவை மூன்றே மூன்றுதான். மது அம்பாட்டின் கேமிரா! இளையராஜாவின் இசை! தன்னையே சரியாகப் புரிந்து கொள்ள முடியாத வயதில், மனவளர்ச்சிகுன்றிய ஒரு குழந்தையை அற்புதமாகப் பிரதிபலித் திருக்கும் பேபி ஷாமிலி! இதற்கு மணிரத்னத்தை பாராட்டியே தீரவேண்டும். ஒரு சின்னக் குழந்தையிடம் இத்தனை நுணுக்கமாக வேலை வாங்கமுடியுமா என்று கருதுமளவுக்கு மனிதர் நம்மை வியப்பிழாழ்த்தி விடுகிறார். சரி! சந்தோஷம்! அப்புறம் என்ன? அப்புறம் சொல் வதற்கு எதுவுமில்லை!

குழந்தைகளுக்கு தனி படுக்கை அறை; பெற்றோருக்கு தனி படுக்கைஅறை! வசதியான வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை சாத னங்களையும் கொண்ட குட்டி பங்களா! இப்படிப்பல பங்களாக்களைக் கொண்ட அடுக்கு மாடிக் கட்டடத்தை சுற்றி வருகிறது கதை.

அங்கே, அழகழகாய் நிறையக் குழந்தை கள்; வண்ண வண்ண ஆடம்பர உடைகள்; கான்வென்ட் படிப்பு... எதிலும் இங்கிலீஸ் தனம்...இத்யாதி...இத்யாதிகள் கொண்ட ஒரு பட்டாளம். இடைவேளை வரை இந்தக் குழந்தைப் பட்டாளத்தின் ஆதிக்கம்தான்.

ஒரு மோசமான குறும்பை காளியப்பன் மகன் ஏழுமலை செய்தால் ஒரு சேர நாம் கண்டிப்போம். அதுவே விக்னேஷ்வர் புத்திரன் ஸ்ரீகாந்த் ஆக இருந்தால் 'நாட்டிபாய்' என்று செல்லமாகக் கன்னத்தில் தட்டி வியந்து கூறு வோம். இரண்டாவது சொன்னதைத்தான் மணிரத்னமும் செய்திருக்கிறார்.

குழந்தை எப்படிப்பிறக்கும்? என்று ஒரு சிறுவன் பெரியவரிடம் ('அங்கிளாம்') கேட்டு விட்டு ஓடுவது; படுக்கைஅறையில் அண்ணனும் தங்கையும், சேர்ந்து அப்பாவும், அம்மாவும் 'டைவர்ஸ்' பண்ணி விடுவதற்கான சாத்தியம் பற்றியும், அப்படி 'டைவர்ஸ்' செய்தால் அவர்களில் யார், யாரை எடுத்துக் கொள்வார்கள் என்பதுவரை 'டிஸ்கஸ்' செய்வது; எதிரெதிர் மாடியில் நின்று கொண்டு காதல் கணை தொடுக்கும் ஒரு ஜோடியின் செய்கைக்கு சிறுவர் பட்டாளம் 'ரன்னிங் காமண்டரி' கொடுப்பது; எதற்கெடுத்தாலும் 'ஓ' வென்று செவிப்பறை கிழியுமளவுக்கு இங் கிலீஸ்தனமாக' கூச்சலிடுவது, இப்படிப் பல காட்சிகள்.

இவைகளுக்கிடையில், ஆளுக்கொரு'கூலிங் கிளாஸ்' போட்டுக்கொண்டு, சிறுவர், சிறுமியர் குழாம்...இரண்டு காலையும் அகற்றி வைத்துக் கொண்டு...கையை வளைத்து, நெளித்து... லேசாக முன்னேயும், பின்னேயும் ஓடி...என்ன வெல்லாமோ செய்கிறார்கள்... அவை எல்லாம் 'பிரேக் டான்ஸாம்'!

கதாநாயகன், கதாநாயகி பற்றி சொல் லவே இல்லையே என்று கேட்கிறீர்களா!

அஞ்சலி அஞ்சலி அஞ்சலி அஞ்சலி அஞ்சலி அஞ்சலி அஞ்சலி அஞ்சலி அஞ்சலி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்கள் முன்பாதியில் குழந்தைகளின் அட்டகாசம் போக மீதிக் காட்சிகளில்தான் வருகிறார்கள். ரகுவரன்தான் அஞ்சலியின் அப்பா!ரேவதி அம்மா! அஞ்சலிக்கு ஒரு அண்ணன், ஒரு அக்கா! எல்லோருமே நன்றாகச் செய்திருக்கிறார்கள்.

அது சரி! ரகுவரன் ஏன் அடிக்கடி, (சோகக் காட்சிகளிலெல்லாம்) ஏதோ அருவருப்பான பொருளை வாயில் போட்டு, கஷ்டப்பட்டு மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் ...நாடியை மேலும் கீழுமாக அசைத்து. . . வெறித்துப் பார்த்தவாறு . . . என்னவெல்லாமோசெய்கிறார்? நடிக்க வேண்டியதுதான்! அதற்காக இப்படியா! இதுதான் மணிரத்னம் 'டச்சா'?

'அக்னி நட்சத்திர' நாயகன் பிரபுவும் படத்தில் வருகிறார். அவரை ஒரு மர்மமான ஆசாமி போன்றே `மணிரத்னம் ஆரம்பத்திலிருந்தே காட்டி வருகிறார். காலனியே அவரைக் கண்டு பயந்து ஒதுங்கிறது. ஆனால், அஞ்சலி மட்டும் பிரபுவுடன் ஒட்டிக்கொள்கிறது...! பிரபு யார்? எதற்கு அங்கு அப்படி ரகசியமாக வந்து செல்வதுபோல் நடந்து கொள்கிறார்?மூச்!அதெல்லாம் கேட்கக்கூடாது! கடைசியில் ஒரு சண்டைக்காட்சி வருகிறது! அதற்கு பிரபு வேண்டுமே!

கொட்டும் மழையில் சண்டைக்காட்சி யார் யாரை அடிக்கிறார்கள் என்றே தெரியவில்லை? ஒரு வழியாக வில்லனைக் கொன்று, அஞ்சலியின் குடும்பத்தைக் காப்பாற்றிய புண்ணியத்தைக் கட்டிக் கொண்டு விலங்கு மாட்டிக் கொள்கிறார் பிரபு!

கதைக்குத் தேவையேயில்லாமல் ஒருகாதல் ஜோடி. கடைசியில், அந்த ஜோடியை குழந்தைகளே பெற்றோருக்கு தெரியாமல் பாதுகாப்பாக 'அனுப்பி' வைக்கிறார்கள். அர்த்தமில்லாமல் ஜனகராஜ் வேறு பைத்தியமாக வருகிறார்! கத்தி, கத்தி, நமக்கு பைத்தியம் பிடித்து விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகிறார்.

படத்தில்ஒரு வில்லன். அவன் செய்யும் ஒரு கொலையை ரகுவரன் பார்த்து விடுகிறார். ரகுவரனுக்கு மிரட்டல்... 'இதற்கெல்லாம் சம்மந்தமே இல்லாத பிரபு இடையில் புகுந்து வில்லனுடன் மோதுகிறார்...சுத்தப் பேத்தல்! ஆனாலும் மணிரத்னத்துக்குத்தான் 'அறிவு ஜீவி' (!) பட்டம் கிடைக்கும்!

இடைவேளைக்குப் பிறகு படம் முழுவதும் ஒரே இருட்டு! யாரோ மணிரத்னத்துக்கு தவறான தகவல் தந்திருக்கிறார்கள்! இருட்டில் காட்சிகள் இருந்தால்தான்'அவார்டு' கிடைக்குமென்று...!

குழந்தைகள் சைக்கிளில் பறந்தவாறே பாடும் அந்தப் பாடல்...விட்டாலாச்சாரியாரின் திறமைக்கு முன் மணிரத்னம் நிற்க முடியாது என்று யாராவது சொன்னோமா என்ன? வரிந்து கட்டிக்கொண்டு மாயாஜாலத்தில் இறங்கியிருக்கிறார். அபத்தம் !

அஞ்சலி உயிரிழக்கும் அந்தக் கடைசிக் காட்சி உண்மையிலேயே நெஞ்சை நெகிழச் செய்கிறது. ஆனால், 'எந்திரி அஞ்சலி'... 'எந்திரி அஞ்சலி' என்று அஞ்சலியின் அக்கா கூச்சலிடுவது...அப்பட்டமான மிகை.

சர்வதேசப் பெண் குழந்தைகள் ஆண்டு இது! பெண் சிசுக்களை கொல்லும் வழக்கம் இன்றும் தமிழகத்தின் சில கிராமங்களில் இருக்கிறது. குழந்தை நிலையிலேயே பெண்களுக்கெதிரான கொடுமைகள் எத்தனையோ...! இவற்றில் ஒரு சின்ன இழையை எடுத்துக் கொண்டு மணிரத்னம் தனது திறமையைப் பயன்படுத்தியிருக்கலாம்...! அதை விட்டுவிட்டு வெறும் தொழில் நுட்பசமாச்சாரங்களை மட்டும் நேர்த்தியாகக் கையாண்டு, அபத்தமும், பேத்தலும் நிறைந்த ஒரு படத்தை அளித்திருப்பது வேதனை தருகிறது.

மொத்தத்தில் மணிரத்னத்தின் 'கலைச் சேவை' பற்றி யோசிக்கும்போது ஒரே ஒரு விஷயம்தான் ஞாபகத்துக்கு வருகிறது.

போலீஸ் அதிகாரி போல் நடித்து 4 இடங்களில் திருட்டு; டிப்டாப் ஆசாமி நூதன மோசடி; போலீசார் வலை வீச்சு...என்று தினத்தந்தியில் செய்திகள் வருமே... அதுதான் ஞாபகத்துக்கு வருகிறது!

— சித்ரா

---

## அறிவிப்பு

அன்புடையீர், வணக்கம்.


ஆசாங்கத்தின் பதிவுக்காக காத்திருந்த புதிய இளைஞன், பதிவு பெற்று போராடும் புதிய இளைஞன் என்ற பெயருடன் வருகின்றது.

சந்தா செலுத்தி, பத்திரிக்கை கிடைக்கப் பெறாத வாசகர்கள் யாரிடம், எந்த தேதியில் பணம் செலுத்தினீர்கள்—என்ற விபரத்தை உடன் பத்திரிக்கை அலுவலகத்திற்கு அனுப்பக் கோருகின்றோம்.

—நிர்வாகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## டில்லி நாடகம் :

துணைப்பிரதமர் தேவிலால் டிஸ்மிஸ் செய்யப்பட்டுள்ளார். இது தேசிய முன்னணி அரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியின் முடிவா? அல்லது புதிய நெருக்கடியின் தொடக்கமா? என்பதை இனி வரும் நாட்கள் தெளிவுபடுத்தும்.

ஆயினும் சமீபத்திய சில நாட்களில் நடந்த அரசியல் கேலிக் கூத்துகள் தேசிய முன்னணி அரசு மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையை நாசப்படுத்தி விட்டன. இதற்கான பொறுப்பை தேவிலால் மட்டுமின்றி பிரதமர் வி. பி. சிங்கும் ஏற்கத்தான் வேண்டும்.

தேவிலாலை பொருத்தவரை நாட்டு நலனைவிட தனது வாரிசுகளின் நலனே பிரதானம் என நினைப்பவர். தன்னை 'கிராமப்புறத்தான்' என்று கூறிக்கொள்ளும் அவரிடம் கிராமப்புற ஆண்டையின் மனப்பான்மையே அதிகம். தான் துணைப் பிரதமர் ஆனதும் அரியானா முதல்வராக தனது சொந்த வாரிசையே நியமித்து பரம்பரை ஆட்சிக்கு பட்டாபிஷேகம் நடத்தியவர் அவர். அந்த வாரிசு செய்த அடாவடித்தனங்களை எல்லாம் நியாயப்படுத்தும் தந்தையாக செயல்பட்டதே இப்போது அவருக்கு ஏற்புட்டுள்ள நிலமைக்கு முக்கிய காரணம்.

அதே நேரத்தில் 'ராஜா' வி.பி.சிங் ஆரம்பத்திலிருந்தே தனது துணைப் பிரதமரை கட்டுப்படுத்த தவறிவிட்டார். ஏனெனில் பிரதமர் தேர்தலில் போட்டியை தவிர்ப்பது என்ற பெயரில் தேவிலாலை தங்கள் பக்கம் இழுத்து வி. பி. சிங் அணியினர் நடத்திய நாடகமே இதற்குக் காரணம். தான் இல்லாமல் வி.பி.சிங் பூஜ்யம் என தேவிலால் நினைத்தார். அவரை வி.பி. சிங் பக்கம் இழுத்து வர வலைவீசி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெற்றி பெற்றவர் அருண்நேரு. அந்த அருண் நேருவும், தேவிலாலும் இப்போது எலியும் பூனையுமாக மாறியது வேடிக்கையே.

**கண நேர மகிழ்ச்சி**

அருண்நேரு தீட்டிய திட்டத்தால் நாடாளு மன்ற ஜனதாதளத் தலைவராகவும் தேவிலால் தேர்ந்தெடுக்கப்பட்டார். வி. பி. சிங் பிரதமராக முடியாது என சந்திரசேகர் மகிழ்ந்திருந்த அந்த கண நேரத்தில் வி. பி. சிங்கே பிரதமராக இருக்கட்டும். நான் தாவு (பெரியப்பா) என்று சுயமாக பட்டம்சூட்டிக் கொண்டவர் தேவிலால். இபபோது அதே வி.பி. சிங்கினால் அவர் டிஸ்மிஸ் செய்யப்படுவதும் விநோதம்தான்.

இந்த வேடிக்கை விநோதங்களுக்கு பின்னணி என்ன? அரியானா முதல்வர் பதவியை சௌதாலா ஏற்ற பின்னர் மேஹம் தொகுதி இடைத் தேர்தலும் அப்போது நடந்த வன்செயல்களும், அவர் எப்படிப்பட்டவர் என்பதை எடுத்துக் காட்டின. அப்போது ஏற்பட்ட நெருக்கடியில் தேவிலால் பதவி விலக முன் வந்தார். அப்போதே பிரதமர் வி,பி. சிங் தோழமை கட்சிகளுடன் கலந்து பேசி உறுதி யான நடவடிக்கையை எடுத்திருந்தால், தேசிய முன்னணி அரசுக்கு இருந்த பெயர் சிதையாமல் காப்பாற்றப்பட்டிருக்கும். அதற்கு பின் சௌதாலா மீண்டும் முதல்வர் பதவியில் அமரா மல் தடுப்பதற்கு உத்தரவாதம்செய்யப்பட்டிருந் தால் மிச்சம் மீதியிருந்த நம்பிக்கையையும் மக்கள் இழக்காமல் பார்த்துக் கொண்டிருக்க முடியும், ஆனால், மீண்டும் சௌதாலா முதல் வர் பதவி ஏற்கப் போகிறார் என்பது தனக்குத் தெரியாது என்று வி. பி. சிங் கூறியதை மக்கள் இப்போது நம்ப மறுக்கிறார்கள்.

**ஒளிந்திருக்கும் மனிதன்**

உத்தமர் வேஷம் போடும் ஆளும் வர்க்க அரசியல்வாதிகளின் உள்ளே இன்னொரு மனிதன் ஒளிந்திருக்கின்றார் என்ற சந் தேகத்தை மீண்டும் ஒருமுறை இது புலப்படுத்தி யுள்ளது. (இந்த நேரத்தில் நம் மனத் திரை யில் ஹேக்டேயின் பிம்பம் தோன்றி மறைவதை தவிர்க்க இயலவில்லை).

சௌதாலா மீண்டும் முதல்வராக வருவதை வி,பி. சிங் தடுக்காமல் இருந்ததற்கு அவருக்கும் தேவிலாலுக்கும் இடையே ஏற்பட்ட பேரம்தான் காரணம் என்று கூறப்படுகிறது. அதாவது, தனது உறவினர் சஞ்சய்சிங்கை மாநிலங்களவை உறுப்பினராக்கி பினனாளில் மந்திரியாக்குவது வி.பி. சிங்கின் விருப்பமாம். தனது இளைய மகனுக்கு மாநிலங்களவை உறுப்பினர் பதவி யும் பின்னாளில் மத்திரி பதவியும் அளிக்கப்பட வேண்டும் என்பது தேவிலாலுடைய கோரிக்கை யாம். விருந்தும், பேச்சுமாக நீடித்து பேரம் முடிந்தது. சௌதாலாவை ஜனதா தளம்— பொதுச்செயலாளராகவும் மீண்டும் முதல்வ ராக்கவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

உடன் பிறப்பு என்ற போதிலும் அரசியலில் தன்னை எதிர்க்கும் தம்பிக்கு ராஜ்யசபை உறுப் பினர் பதவி பெற்றுத் தரும் தந்தையிடம் தனக்கு உடனடியாக மீண்டும் ராஜ்யம் வேண் டும் என்று சௌதாலா அடம் பிடித்தாராம்.

நான் மற்றவர்களைப் போல் தார்மீக அரசியல் நடத்துகிறவன் அல்ல 'இஷ்யூ' (பிரச்சனை) அடிப்படையில் அரசியல் நடத்து கிறவன் என்று வழக்கம் போல் கூறி மூத்த மகனை மீண்டும் முதல்வராக்கினார் தேவிலால். ('இஷ்யூ' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு குழந்தைகள் என்ற அர்த்தமும் உண்டு)

இந்த 'இஷ்யூ' அடிப்படையிலான தேவி லாலை தார்மீக அடிப்படையிலான வி.பி.சிங் அரவணைத்து செல்வதற்கு இன்னொரு நோக்கமும் இருப்பதாக அரசியல் பார்வை யாளர்கள் நினைக்கிறார்கள். அது தான் வி.பி. சிங்கும் அவரது ஆதரவு அமைச்சர்கள் கடைப்பிடிக்க நினைக்கும் புதிய தொழிற் கொள்கை. இந்தக் கொள்கை தொடர்பான அறிவிப்பு ஒன்றை அமெரிக்காவில் முன்பு கம்ப்யூட்டர் பொறியாளராக இருந்து, தந்தை யின் அரசியல் தலைமையை வாரிசு உரிமையாக பெற்ற தொழில் அமைச்சர் அஜீத் சிங் நாடாளு மன்றத்தில் அறிவித்தபோது அதை கடுமையாக எதிர்த்தவர் சந்திரசேகர். இதற்கு பக்க பாட்டு பாடியவர் தேவிலால். இந்த இருவரும் சேர்ந்து முதலுக்கே மோசம் செய்து விடுவார்களோ என்ற அச்சத்தில்தான் அவருடன் பேரம் பேசப் பட்டதாகக் கருதப்படுகிறது. தேவிலாலும் 'பிளேட்'டை திருப்பி போட ஆரம்பித்தார். இதற்கு பெரிதாக தேவிலாலை 'கன்வின்ஸ்' பண்ணியிருக்க வேண்டியதில்லை.

தன்னை நாட்டுப் புறத்தான், விவசாயி என்று தேவிலால் கூறிக் கொண்டாலும், அவருடைய குலக் கொழுந்து சௌதாலா அமெரிக்க டிஸ்னிலாண்ட் பாணியில் அரியானா வில் ஆயிரக்கணக்கான விவசாயிகளின் நிலத்தை கையகப்படுத்தி 'விநோத உலகம்' ஒன்றை உருவாக்கத் தீவிரம் காட்டியதை மறந்து விடக் கூடாது. அது மட்டுமின்றி தேவிலால் அகராதி யில் விவசாயி என்றால் பண்ணையார் என்று தான் அர்த்தம். உ.பி. விவசாயிகள் தலைவர் திகைத் டிராக்டருக்கு 30 சதம் மானியம் அளிக்க முன்வரும் விவசாயிகள் பிரதிநிதி தேவிலாலை பிரதமராக்க துடிப்பது தெரிந்த விஷயமே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பண்ணையார்களுக்கும், முதலாளிகளுக்கும் உள்ள கள்ள உறவு ஊரறிந்த விஷயம் அல்லவா. இந்த நிலையில் புதிய தொழிற் கொள்கையை ஆதரிப்பதில் தேவிலாலுக்கு எந்தவித சங்கடமும் இல்லை.

இந்தச் சூழ்நிலையில்தான், அரசியல் சாணக்கியன் எனக் கருதப்படும் தன்னை பிரதமர் வி.பி.சிங் அண்மைக் காலத்தில் ஒதுக்கி வருவதையும், தனது உறவினர்களைப் பழி வாங்கும் போக்கை கடைப்பிடிப்பதையும் விரும்பாத அருண்நேரு, வி.பி. சிங்கையும் நாட்டுபுறத்தான் தேவிலாலையும் ஒரே நேரத் தில் தர்ம சங்கடத்தில் ஆழ்த்த சௌதாலா விவகாரத்தை நன்கு பயன்படுத்திக்கொண்டார். அமைச்சர் பதவியிலிருந்து ராஜினாமா செய்வ தாக அறிவித்தார். அவரது நண்பர்கள் ஆரிப் முகமது கானும், சத்யபால்மாலிக்கும் இதே போன்று அறிவித்தனர். தனது நற்பெயர் நார் நாராக கிழிந்து விடும் என்று தெரிந்தவுடன் வி.பி சிங்கும் ராஜினாமா நாடகத்தை அரங் கேற்றி தியாக சீலர் என்ற பட்டத்தை தக்க வைத்துக் கொண்டார்.

சௌதாலா விவகாரத்தை நெருக்கடி நிலைக்கு தள்ளிய அருண்நேரு, ஆரிப்முகமது கான் மீது தேவிலால் பாய்ந்து குதறினார். அவர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத் தினார். போஃபர்ஸ் ஊழலில் அருண்நேருவுக்கு சம்பந்தமிருப்பதாக கூறி போலிக் கடிதம் ஒன்றை பிரதமருக்கு அனுப்பினார். வி.பி. சிங் 1987-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவருக்கு எழுதியதுதான். இத்தக் கடிதம் என்று வேறு கூறினார். அருண்நேரு கோஷ்டியின் ராஜி னாமாவை ஏற்க வேண்டும் என்று பிரதமரை வற்புறுத்தினார். இதில் தயக்கம் காட்டிய வி.பி. சிங்கை ''முதுகெலும்பு இல்லாதவர்'' என்று பத்திரிக்கையில் அளித்த பேட்டியில் வர்ணித்தார்.

இதையடுத்து நெருக்கடி மேலும்முற்றியது. தேவிலாலை டிஸ்மிஸ் செய்ய வேண்டும் என்று கோரிக்கை எதிர்தரப்பில் வலுவடைந்தது.

வி.பி. சிங் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்ய முன் வந்தபோதுகூட தோழமை கட்சிகளுடன் கலந்து பேசாத அவர் இப்போது அந்த கட்சிகளின் ஆலோசனையை கேட்டார். இது ஜனதா தளத் தலைவர்களே சுமூகமாக தீர்த்துக்கொள்ள வேண்டிய பிரச் சனை. ஆனால் மக்கள் நம்பிக்கை நாளுக்கு நாள் சரிந்து வருகின்றது. இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது அவசர அவசியம்என்பதை இடதுசாரிக் கட்சிகள் தெளிவாக எடுத்துக் கூறின.

அமைச்சர்களுக்கும் தலைவர்களுக்கும் நடத்தை விதி ஒன்று வகுக்கப்பட வேண்டும். என்பதையும் அந்த கட்சிகள் புரிய வைத்தன.

தோழமைக் கட்சிகளின் ஆதரவு நீடிக் கும் என்று தெரிந்த நிலையில் தேவிலாலை அமைச்சரவையில் இருந்து நீக்குவதாக வி. பி. சிங் அறிவித்தார். ''சிறையிலிருந்து விடுபட்டதாக உணர்கிறேன்'' என்று தேவிலால் கூறியபோதிலும் அடிபட்ட புலியாக அவர் செயல்படுவார் என்பதை மறந்துவிடக் கூடாது.

அது மட்டுமின்றி அவருக்கு போலிக் கடிதத்தை தயாரித்து அளித்து அவரைச் சிக்கலில் மாட்டி விட்டவர்கள் இ,காங்கிரஸ் காரர்கள் என்பதும் சந்தேகத்துக்கு உரியது. எனவே அவர்கள் இனி தேவிலாலை உசுப்பி விட்டு இந்த ஆட்சியை கவிழ்க்கும் அடுத்தகட்ட பணியில் ஈடுபடலாம்.

புதிய அரசின் மீது மக்களின் நம்பிக்கை குறைந்து வருகிறது என்பதை மனதிற்கொண்டு மதவெறி மூலம் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க பாரதீய ஜனதா கட்சியும் ஆயுத்தம் செய்கிறது. திடீர் தேர்தலுக்கு தயாராகுங்கள் என அது தொண்டர்களை கேட்டுக் கொண்டி ருக்கிறது. இது போன்ற ஓர் அழைப்பை இ. காங்கிரஸும் விடுத்துள்ளது.

எனவே, வரவிருக்கும் நாட்கள் மிக முக்கிய மானவை. வி.பி.சிங் ஆட்சி நீடிக்க வேண்டும் என்றே இடதுசாரி கட்சிகள் விரும்புகின்றன. ஆயினும் மக்களின் ஆதரவும், நம்பிக்கையுமே இதை சாத்தியப்படுத்தும். விலைவாசி கட்டுப் பாடு,வேலை செய்யும்உரிமைக்கு உத்தரவாதம் வகுப்பு வாதத்தை ஒடுக்குவது போன்ற தனது தேர்தல் உறுதிமொழிகளை தேசிய முன்னணி உண்மையாக செயல்படுத்த முன்வர வேண்டும். அது மட்டுமின்றி, தோழமை கட்சிகளுடன் கலந்து பேசி பொதுவான திட்டத்தின் அடிப் படையில் அது செயல்பட வேண்டும். அப்போது தான் மக்களின் நம்பிக்கையை தக்க வைத்துக் கொள்ளமுடியும். இல்லாவிடில் புதிய தீர்ப்பை எழுத அவர்கள் தயாராகி விடுவார்கள்.

—மித்ராய்

★



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1946-கப்பற்படை எழுச்சி



## சுதந்திரப் போரில்

## ஓவியப் போராளி

பிறக்கும் பொழுதே ஒரு கையில் தூரிகையும் மறு கையில் வண்ணக் கலவையும் ஏந்திய வண்ணம் பிறந்திருப்பாரோ என்று வியக்கும் வண்ணம் மாபெரும் கலைஞராகத் திகழ்ந்தவர் சித்தபிரசாத்.

பிளவுபடாத இந்தியாவில், பிரிக்கப்படாத வங்கத்தில் மிதுனாப்பூர் மாவட்டத்தில் 1913ம் ஆண்டு ஜுன் திங்கள் 21ம் நாள் பிறந்தார் சித்தபிரசாத். இவரது முழுப் பெயர் சித்த பிரசாத் பட்டாச்சார்யா.

தனது கிராமத்தைச் சேர்ந்த சிற்பிகளும், ஓவியர்களும், பொம்மலாட்ட வித்தைக்காரர் களும், பிற கலைஞர்களும்தான் தன்னை ஓவியனாக்கிய ஞானகுருக்கள் என்று கம்பீரமாக அறிவித்துக் கொண்டவர் சித்தபிரசாத்.

இரண்டாண்டு கல்லூரி வாழ்க்கையை முடித்துக் கொண்டவுடன். இவர் ஓவியக்கலை உலகில் பிரவேசிக்க ஆர்வம் கொண்டார். விடுதலைப் போர் என்னும் எரிமலை பாரதம் எங்கும் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்த காலம் அது.

தன்னை ஒத்த இளம் கலைஞர்கள், விடுதலைப் போரில் தம்மை இணைத்துக் கொண்டதைக் கண்டார் சித்தபிரசாத். விடுதலை வேள்வியில் தன்னை ஆகுதியாக்கிக் கொள்ளத் துடித்த அவர்; இந்துக்கள்—முஸ்லிம்கள் என்று பிரிவினை பாராட்டாமல், சோஷலிஸ்ட் இந்தியாவை நிறுவுவதையே இலட்சியக் கனவாகக் கொண்டிருந்த இடதுசாரி அணியோடு கரம் கோர்த்து நடை போடலானார்.

1943-44ம் ஆண்டுகளின்போது கொடிய பஞ்சம் வங்கத்தைத் தாக்கியது. ஆயிரக்கணக்கான உயிர்களைச் சூறையாடி கொக்கரித்தது. வெறும் சோற்றுக்கு வந்த பஞ்சத்தைக் கண்டு சொல்லக் கொதித்தது சித்தபிரசாதின் நெஞ்சம். வங்க சிராமங்கள் எங்கும் சுற்றியபின் அவர் வடித்த ஓவியங்கள், அந்தக் கண்ணீர்க் கதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களைப் பேசின. கல்கத்தா பத்திரிகைகள் அவர் படைத்த சோக சித்திரங்களைப் பிரசுரித்தன. ஆனால், பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் பேய்க் கரங்களுக்குப் பயந்த அந்த பத்திரிகை நிறுவனங்கள், அவரது ஓவியங்களில் பலவற்றை அழித்துவிட்டன.

1946ம் ஆண்டு, வங்கத்திலிருந்து பம்பாய்க்கு இடம் பெயர்ந்தார் சித்தபிரசாத். நோக்கம்: கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகைகளுக்கு ஓவியம் வரைதல். வர்க்கப் போரின் பல்வேறு வடிவங்களை அவரது தூரிகைகள் 'ஓவியமாக்கின. பிரிட்டிரிஷ் ஏகாதிபத்தியத்தைக் குலைநடுங்கச் செய்த இந்தியக் கப்பற்படை வீரர்களின் போராட்டத்தை அவர் சித்திரமாக வடித்திருந்தார். காண்போரை மெய்சிலிர்க்க வைக்கக் கூடியது அந்த உயிரோவியம்.

1949ம் ஆண்டு உலக சமாதான இயக்கத்தின் அறைகூவலை ஏற்றுக் கொண்ட அவர், தனது கலைப்படைப்புக்களை உலக சமாதானத்திற்கு அர்ப்பணித்தார்.

1952ம் ஆண்டு, 'ஏஞ்சல்ஸ் வித் அவுட் ஃபெய்ரி டேல்ஸ்' எனனும் தலைப்பில் லினோகட் ஓவியத் தொகுதி ஒன்றை தயாரித்து அளித்தார் சித்தபிரசாத். வறுமை, நோய், அடக்குமுறை என்னும் கொடிய சூழலில் சிக்கித் தவித்த இந்தியக் குழந்தைகளின் வாடிய முகங்களை சித்தரித்திருந்தது அந்தத் தொகுதி.

அதுமட்டுமா? அவர் சிறந்த கவிஞராகவும். நாடோடிக் கதைகளைப் படைக்கும் கதாசிரியராகவும் திகழ்ந்தார். கல்கத்தா நகரின் ரிக்ஷா வாலாக்களைப் பற்றி அவர் நெடுங்கவிதை ஒன்று தீட்டியுள்ளார். இரண்டு கவிதைத் தொகுதிகளையும், ஒரு நாடோடிக் கதைத் தொகுதியையும் அவர் வெளியிட்டுள்ளார்.

மாபெரும் ஓவியக் கலைஞர் சித்தபிரசாத் இந்திய விடுதலைப் போராட்டத்தின் வீர வரலாற்றை ஓவியங்களில் வடித்துவைத்துள்ளார். ராமாயண காவியம் முழுவதையும் சித்திரமாக வடித்து வைத்துள்ளார் அவர், ஆனால், அந்த ஓவிய மேதையின் இவ்விரு கலைப் படைப்புக்களையும் வெளியிடுவதற்கு எந்த பிரசுரகர்த்தாவும் முன்வரவில்லை.

பாரத தேசத்திற்கு வெளியே சோவியத் யூனியன், செக்கோஸ்லேவிகியா, அமெரிக்கா, டென்மார்க், மெக்சிகோ, டான்சானியா ஆகிய நாடுகளில் சித்தபிரசாத்தின் ஓவியங்கள் புகழ் பெற்றவை.

வாழ்வின் இறுதிக் காலத்தில் ஏமாற்றங்களும், நோயும் அவரை சுற்றிவளைத்தன. ஆனால், வாழ்வின் இறுதி மூச்சுவரை தன் கரத்தில் ஏந்திய தூரிகையை வீசி எறிந்தாரில்லை. மனிதனை மனிதன் சுரண்டும் கொடுமைக்குப் பெரியதோர் முற்றுப்புள்ளி வைத்திட அவரது தூரிகை வண்ணக் கலவையைக் குழைப்பதை நிறுத்தவே இல்லை.

நன்றி : சாந்தி


போராடும் புதிய இளைஞனுக்கு

வாழ்த்துகள்

**M. V. காளிமுத்து**

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி
வெள்ளையா புரம்
சிவகாசி வட்டக்குழு.

சுவையில சிறந்தது
ஸ்டேஸ் ரெட்ரோஸ் டீ

**சுதா ஏஜென்ஸீஸ்**

ஸ்டாக்கிஸ்ட். P. முத்துராஜ்
சிவகாசி

www.tamilarangam.net


போராடும் புதிய இளைஞனுக்கு
வாழ்த்துகள்

**டாக்டர் T. A. பெருமாள்**
ஜெகஜோதி சித்த ஹோமியோ ஆஸ்பத்திரி
456, தென்காசி ரோடு
இராஜப்பாளையம்.



பழுதுபார்க்க சிறந்த இடம்
ஆட்டோ, மற்றும் இரண்டு சக்கர
வாகனங்களுக்கு

**காளீஸ்வரி ஆட்டோ ஒர்க்ஸ**
பஸ் ஸ்டாண்டு எதிர்ப்புறம்
சிவகாசி



போராடும் புதிய இளைஞனுக்கு
வாழ்த்துகள்

**S. M. P. சைக்கிள் மார்ட்**

பஸ்ஸ்டாண்டு அருகில்
சாத்தூர் ரோடு—சிவகாசி.



☐ சிறந்த முறையில் பாடல் பதிவு செய்து தரப்படும்.
☐ டெக், கலர் டி.வி. வாடகைக்கு கிடைக்கும்.

**சுருதி**
**ஆடியோ & வீடியோ**
212, காந்தி வீதி,
சிவகெங்கை-623 560




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இடதுபுறம்
# படகை விடு

கவிஞர் கே. சி. எஸ்.

ஏல ஏலோ ஏலோ ஏலோ.

நேற்றும் இல்லை
முன்னும் இல்லை
காற்றிது போலே
கரையை நோக்கி
படகு போக
கடலிதன் மேலே.

களைப்பாற நேரமில்லை
கண்ணுறங்க வேளையில்லை.
காற்று மாறும் முன்னே—கரை
சேர வேணும் அண்ணே.

பொழுது எழ வானவெளி வாசலிலே—எவளோ
போட்டு வைத்த வைரமணிக் கோலமெல்லாம்
எழுந்து தாவும் அலைகளினால் அழிந்துபோகுமோ—இனி
எழுதமுடியாதபடி ஈரமாகுமோ.

முளைத்த பயிர் வளரவில்லை
வளர்ந்த பயிர் தழைக்கவில்லை
களைத்து கருகி படுத்துறங்குது களத்துமேட்டிலே—இங்கு
மழைப்பாரல் துளிர்க்கிறதே யாருங்கேக்கலே—இந்த
மாகடல் குளிக்கணுமோ ஞாயம்பாக்கிலே.

அலையடங்கி ஓய்ந்த பின்னே
தலைமுழுகும் எண்ணமுடன்
அக்கரையில் நிற்பவரே ஏலஏலோ—இந்தக்
கதை நடந்து கண்டதுண்டோ ஏலஏலோ.

சுழித்து வீசும் அலைகள் தமை
எதிர்த்து நிற்க துணிந்தால்தான்
குளித்துக்கரை ஏறலாகும் ஏலஏலோ—இப்படி
கூட்டம் பேட்டு என்ன பயன் ஏலஏலோ.

வலது புறம் நமை விழுங்கும்
முதலைகளும் திமிங்கிலமும்
மறைந்திருக்கும் அந்தப்புறம்
இடதுபுறம் படகைவிடு ஏலஏலோ—கரை
ஏறும்வழி சேரும் அது ஏலஏலோ

---

வெளியிடுபவர் : மகேந்திரன், தெற்கு போக் சாலை,
தி. நகர், சென்னை-17.

அச்சிடுபவர் : ஜே. ரமணி, பிளேஸ் பிரிண்டர்ஸ், சென்னை-20

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நமீபியாவின் சுதந்திரத்தை
இவர்கள்
இப்படிக் கொண்டாடுகிறார்களோ!


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராடும் புதிய இளைஞன் : T. N. M. S (C) 1111

தாக்குவதற்கும், தாங்குவதற்கும்
மின்னல் வேகத்தில் செயல்படுங்கள்.
திறமையும், வலுவான கால்களும்
உங்களுக்கு வெற்றியைக் கொடுக்கும்.

—ஹோசிமின்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்